விலை ரூபா: 15.00

பொதுசன நூலகம்
மாநகர...
யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 வைகாசி 09 சனிக்கிழமை (23.05.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 155

SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL
CALL:- 222 5908 / 222 8812


# இறுதிக்கட்ட யுத்தத்தின் போது
# 6 ஆயிரத்து 200 படையினர் பலி!

## 30 ஆயிரம் பேர் படுகாயம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கு எதிராக நடைபெற்ற இறுதிக்கட்ட போரில் கடந்த 3 வருடங்களில் 6 ஆயிரத்து 200க்கும் அதிகமான படையினர் பலியாகியுள்ளதாகவும் 30 ஆயிரம் பேர் வரை காயமடைந்திருப்பதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.அரச தொலைக்காட்சியில் மோதல்கள் தொடர்பான தகவல்களை வெளியிட்டபோது பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ இத்தகவலை வெளியிட்டுள்ளார்.இதேவேளை 26 வருட மோதல்களில் மொத்தமாக 80 ஆயிரம் வரையிலான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் நம்பப்படுகிறது. (12ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் தீர்வை முன்வைக்குமாறு மகிந்தவிடம் ஹிலாரி கோரிக்கை



(வாஷிங்டன்)

இலங்கையில் விரைவில் அரசியல் ரீதியான தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்குமாறு அமெரிக்காவின் இராஜாங்கச் செயலாளர் கிலாரி கிளின்டன், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் தொலைபேசியூடாக கோரிக்கை விடுத்துள்ளதாக அமெரிக்க இராஜாங்கச் செயலகத்தின் பேச்சாளர் இயன் கெலி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் யுத்தத்தினால் மூன்று இலட்சத்திற்கும் அதிகமான தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து வாழ்வதாகவும் அவர்களுக்கான மீள் குடியேற்ற (12ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் போர்ப் பகுதியில் மீறப்பட்டுள்ளன



### விஜய் நம்பியார் விபரிப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவுப் பகுதியில் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் மீறப்பட்டுள்ளன என ஐ.நாவின் மூத்த அதிகாரி விஜய் நம்பியார் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வட பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்ற பகுதிகள் ஒரு பேரழிவு ஏற்பட்டிருப்பது போன்று காட்சியளிப்பதாகவும் அவர் விபரித்துள்ளார்.

மோதல்கள் இடம்பெற்றிருந்த பகுதிக்கு மேலாக உலங்கு வானூர்தியில் சென்று நிலைமைகளை (12ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனின் உடல் இராணுவத்தால் தகனம்

(கொழும்பு)

இராணுவத்துடன் நடந்த கடும் மோதல்களின் போது கடந்த சில தினங்களுக்கு முன்னர் கொல்லப்பட்டதாக கூறப்படும் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் உடல் தகனம் செய்யப்பட்டுவிட்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார கூறியுள்ளார்.

மோதலின் (12ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் நல்லிணக்கம் ஏற்பட ஐ.நா. செயலர் வலியுறுத்துவார்

(கொழும்பு)



இலங்கை நிலைமைகளை நேரில் அறிவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் செயலர் நாயகம் பான் கீ மூன் இன்று அதிகாலை கொழும்பு வந்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடனான போரில் இலங்கை அரசு வெற்றி பெற்றுள்ளதாக அறிவித்துள்ள நிலையில் இலங்கையில் ஓர் அரசியல் நல்லிணக்கம் ஏற்பட அவர் வலியுறுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கை வந்துள்ள ஐ.நா. செயலாளர், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்திக்கவுள்ளதோடு (12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவில் இருந்து 30 தொன் மருந்து நேற்று விமானம் மூலம் வந்தடைந்தது

(புதுடில்லி)

போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்காக இந்தியாவிலிருந்து 3 கோடி ரூபாய் மதிப்புள்ள 30 தொன் மருந்துகள் நேற்று விமானம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டன. இந்திய விமானப்படை விமானம் மூலம் அந்த மருந்துப்பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டன. அதில் 27 மருத்துவர்கள் மற்றும் துணை மருத்துவர்களும் அனுப்பிவைக்கப்பட்டனர். போரில் காயமடைந்த மக்களுக்கு தேவையான சிகிச்சை அளிக்கும் பணியில் அவர்கள் ஈடுபடுவார்கள்.

அனுப்பி வைக்கப்பட்ட மருந்துகள் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்காக இந்திய இராணுவத்தால் அமைக்கப்பட்டுள்ள கள மருத்துவமனையில் (12ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தளபதி கிளிநொச்சி விஜயம்

(கொழும்பு)

இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்துள்ளார்.விடுதலைப் புலிகளிடம் இருந்து நாட்டை மீட்டமைக்கான கொண்டாட்டங்கள் நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றன.

இந் நிகழ்வில் கலந்து கொள்வதற்காகவே இராணுவத் தளபதி கிளிநொச்சிக்குச் சென்றதாகத் (12ஆம் பக்கம் பார்க்க)

## மன்மோகன் சிங் தலைமையில் புதிய அமைச்சரவை பதவியேற்பு

(புதுடில்லி)

இந்திய மத்திய அரசு, மன்மோகன் சிங் தலைமையில் புதிய அமைச்சரவை நேற்று மாலை 6.30 மணியளவில் பதவி ஏற்றது.

பிரதமருக்கும் இதர அமைச்சர்களுக்கும் ஜனாதிபதி பிரதீபா பாட்டீல் பதவிப் பிரமாணமும் இரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார். மன்மோகன் சிங் தொடர்ந்து 2 ஆவது முறையாக பிரதமராகி இருக்கிறார்.

விழா சரியாக 6.30 மணிக்குத் தொடங்கியது.பிரதமராகப் பதவி ஏற்ற மன்மோகன் சிங், துணை ஜனாதிபதி அன்சாரி, காங்கிரஸ் தலைவர் சோனியா, உட்பட இதர தலைவர்கள் அமர்ந்திருந்த பகுதிக்குச் சென்று வாழ்த்துக்களைப் பெற்றுக் கொண்டார்.

அவரைத் தொடர்ந்து மற்ற அமைச்சர்கள் பதவி ஏற்றனர்.சாதாரணமாக 60 க்கும் குறையாத (12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் அகதிகள் குறித்து அவுஸ்.க்கு எச்சரிக்கை

(கொழும்பு)

மனிதாபிமான மற்றும் அரசியல் ரீதியாக அவுஸ்திரேலியாவில் அடைக்கலம் கோரும் தமிழர்களுக்கு அந் நாடு புகலிடம் வழங்கக்கூடாது என இலங்கை அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. தமிழ்-சிங்கள மக்களுக்கு இலங்கையில் பூரண பாதுகாப்பு காணப்படுவதாகவும் இந்த அடிப்படையில் தமிழ் மக்களுக்கு அரசியல் புகலிடம் அளிக்கப்பட வேண்டிய அவசியமில்லை எனவும் அவுஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதுவர் சேனக வல்கம்பாய (12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் எப்பகுதிக்கும் செல்லக்கூடிய நிலை வந்துள்ளது

### ஜனாதிபதி உரை

(கொழும்பு)

பயங்கரவாதத்தை ஒழித்ததன் மூலம் வெளிநாடுகளுக்கு முன்னால் இலங்கை தலை நிமிர்ந்து நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளதென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

போரில் வெற்றியடைந்த படையினரைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று ஸ்ரீஜெயவர்த்தனபுர நாடாளுமன்ற மைதானத்தில் நடைபெற்ற போதே இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் (12ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தமிழ் மக்கள் ஓரணி திரண்டால் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும்

## அமைச்சர் டக்ளஸ் உரை

(கொழும்பு)

தமிழ் பேசும் மக்கள் ஓரணி திரண்டால் நாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை நியாயமான வழிமுறையினூடாக தீர்த்துக் கொள்ள முடியும். அதற்காகவே உங்களின் ஆதரவையும் பங்களிப்பையும் நான் எதிர்பார்க்கிறேன். இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். சமூக அமைப்புக்கள், சமய அமைப்புக்கள், வர்த்தகப் பிரமுகர்கள், கல்விச் சமூகத்தினர் மற்றும் புத்திஜீவிகள் எனப் பலரும் கலந்து கொண்ட கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

அரசியலுரிமை பிரச்சினை தீர்வுக்கு பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் ஆரம்பித்து அதற்கும் மேலான அதிகாரங்களைப் பெற்றுக்கொள்வதன் ஊடாக தீர்வுகாண முடியும். இவ்விடயத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் விருப்பம் கொண்டிருப்பது வரவேற்புக்குரியது.

இலங்கைக்கு வருகை தந்த இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன், இந்திய வெளியுறவுச் செயலாளர் சிவசங்கர் மேனன் ஆகியோரை சந்தித்து இது குறித்து தான் கலந்துரையாடியதாகவும் அவர்கள் எமது அரசியல் நிலைப்பாடு குறித்தும் வழிமுறை குறித்தும் இணக்கம் தெரிவித்திருப்பதாகவும் கூறினார்.

தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் நாளாந்த பிரச்சினைகளையும் தான் புரிந்து கொள்வதாக தெரிவித்த அமைச்சர் நியாயமான பிரச்சினைகளுக்கு தான் நேரடியாவே தீர்வு காண முற்படுவதாகவும் இவ் விடயத்தில் தமிழ் மக்கள் புரிந்துணர்வுடன் தமது பங்களிப்பை வழங்குவார்களென நம்புவதாகவும் தெரிவித்திருந்தார்.

ஆயுதப் போராட்ட வழிமுறையிலும் ஜனநாயக அரசியல் வழிமுறையிலும் கணிசமான அனுபவம் உண்டென்பதால் தமிழ் மக்களுக்கு சரியான பாதையை காட்டமுடியும். வன்முறைகள், சமூகச் சீரழிவுகள் மற்றும் சட்டவிரோத செயல்களில் ஈடுபடுபவர்களை ஒருபோதுமே அனுமதிக்க முடியாது. அவர்கள நல்ல பிரஜைகளாக திருந்தி வருவதற்கு மட்டும் தன்னால் உதவ முடியும் என்றும் சம காலத்தில் தமிழ் மக்கள் எதிர்கொள்வதாக அடையாளப்படுத்தப்படுகின்ற பிரச்சினைகளை ஜனாதிபதியின் கவனத்திற்கு எடுத்துச் செல்லும் வகையில் தொடர்பு மையமொன்றை ஏற்படுத்தவுள்ளதாகவும் அதே போல் தமிழர்கள் வாழும் பிரதேசங்களில் உள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழ் அதிகாரிகளை பணியில் ஈடுபடுத்துவது குறித்து கவனம் செலுத்துவதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (எ)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சிறுவர் மகிழ்வகம் நிறுவனத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மூன்றாம் கட்டப் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்து வெளியேறிய மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வடக்கு கிழக்கு மனித நேய அமைப்புக்களின் கூட்டமைப்பு இணைப்பாளர் ரி.ரி.மயூரன் தலைமையில் யாழ்ப்பாணத்திலுள்ள மனித நேய அமைப்புக்களின் கூட்டமைப்பு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். வலய கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகமும் அறவழி போராட்ட குழுவைச் சேர்ந்த கே. என். ஜீவகதாஸ், கியூடெக் சிறுவர் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் அ.அஜந்தன் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளனர். (ச- 134)

# ஜனாதிபதியின் வேண்டுகோளை ஏற்று பிரபாகரனின் உடலை இனங்காட்டினேன்

## அமைச்சர் முரளிதரன் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலை புலிகளிடமிருந்து நாட்டை மீட்கும் பணியில் ஈடுபட்ட முப்படைகளுக்கும் பொலிஸ், ஊர்காவற்படை வீரர்கள் மற்றும் சிவில் அமைப்புக்களுக்கும் மகிழ்ச்சியுடன் பாராட்டுக்களைத் தெரிவிப்பதாக அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

பயங்கரவாதத்திலிருந்து நாட்டை மீட்டெடுத்த படை வீரர்களையும் அவர்களது குடும்பத்தார்களையும் கௌரவிக்கும் விசேட நிகழ்வு நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நாடாளுமன்றத்திடலில் நடைபெற்றுள்ளது. இதில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். ஆரம்பத்தில் சிங்களத்தில் உரையாற்றிய அமைச்சர் தொடர்ந்து தமிழில் உரையாற்றினார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரபாகரன் கொல்லப்பட்ட பிற்பாடு பல சந்தேகங்கள் மக்கள் மத்தியில் எழுந்தன. அது அவருடைய உடல்தானா என்கின்ற ஒரு கேள்வி எழுந்திருந்தது. எனவே மதிப்புக்குரிய ஜனாதிபதி அவரது உடலைச் சென்று பார்வையிட்டு உறுதிப்படுத்தும்படி கேட்டிருந்தார்.

அங்கு நாம் சென்று பார்த்த போது அது அவரின் உடலாகவே இருந்தது. இதனையடுத்து அங்கு ஊடகவியலாளர் ஒருவர் என்னிடம் கேட்டார், அந்த உடலை நீங்கள் முதல் முதலாக பார்த்த போது எவ்வாறு இருந்தது என்று?

அத் தருணத்தில்நான் சிந்தித்துப் பார்த்தேன். அந்த ஒரு தனி மனிதனுக்காக நாங்கள் எத் தனை உயிர்களையும் உடைமைகளையும் பறிகொடுத்து விட்டோமென. அவர் கொல்லப்பட்ட தினத்துடன் பயங்கரவாதம் பூண்டோடு ஒழிக்கப்பட்டிருக்கின்றது. இந்த நாட்டு மக்கள் அனைவரும் இன்று பயம், பீதி இன்றி மகிழ்ச்சியுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

தமிழர்களிடையே சில சந்தேகங்கள் இருக்கின்றது. இதன் பிற்பாடு நம்மவரின் நிலை என்னவாக இருக்கும் என வெளிநாடுகளில் வாழ்கின்ற தமிழர்கள் என்னிடம் கேள்வி கேட்கிறார்கள். அவர்களிடம் நான் கூறினேன்

'நீங்கள் யாரை நம்புகிறீர்களோ இல்லையோ எமது மதிப்புக்குரிய ஜனாதிபதி அவர்களை நம்பித்தான் ஆகவேண்டுமென்று. ஏனென்றால் அனைத்து மக்களின் தேவைகளையும் அபிலாசைகளையும் அறிந்து செயற்படுகின்ற ஒரு மாபெரும் தலைவனாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திகழ்ந்து வருகின்றார்.

'அது மாத்திரமன்றி ஒரு துணிச்சல் மிக்க, சிறப்புமிக்க, சர்வதேச நாடுகள் போற்றுகின்ற ஒரு தலைவராக ஜனாதிபதி திகழ்ந்து வருகின்றார். அவருடைய இந்த உறுதியான திடமான முடிபின் காரணமாகத்தான் இன்று பயங்கரவாதம் துடைத்தெறியப்பட்டுள்ளது. இதன் காரணமாகத்தான் இன்று நாட்டின் அனைத்து மூலைகளிலும் உள்ள மக்கள் நிம்மதி பெருமூச்சுடன் வாழ்கின்றார்கள். ஆகவே அந்த உத்தம தலைவருக்கு நாம் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்.

'ஆகவே இந்த காலப்பகுதியில் நாங்கள் நாடாளுமன்ற பலத்தைக் கூட்டினோமாகில் அதுவும் ஆளும் கட்சியுடன் இணைந்து செயற்பட்டிருந்தோமானால் தமிழர்களின் பிரதேசங்கள் பாரிய வளர்ச்சியடைந்திருக்கும். கடந்த காலங்களை மறந்து அவற்றை ஒரு பாடமாக எடுத்துக் கொண்டு எமது நாடாளுமன்ற பலத்தை கூட்டி வெற்றியடைவோம்' எனக்கூறி விடைபெற்றார். (எ-5)

## கலாசாரப் பேரவையின் கூட்டம் பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

மாவட்ட கலை கலாசாரப் பேரவையின் மலர் வெளியீடு சம்பந்தமான உப குழுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெறுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. இக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் அன்றையதினம் நடைபெறமாட்டாது. இதற்கான திகதி பின்னர் அறியத்தரப்படுமென மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி அறிவித்துள்ளார். (ச)

## வலிகாமம் கல்வி வலய கல்வி விழிப்புணர்வுச் செயலமர்வு

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலய முறை சாராக் கல்வி செயற்றிட்ட அலுவலரினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள கல்வி விழிப்புணர்வு செயலமர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மூளாய், வேரம் ஐக்கிய இளைஞர் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. செயலமர்வில் கட்டாயக்கல்வி, முதியோர் கல்வி தொடர்பாக கருத்துரை வழங்கப்படவுள்ளது.

செயலமர்வில் சங்கானை பிரதேச செயலர் திருமதி தேவாந்தினி பாபு, பிரதிக்கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம், வட்டு. கார்த்திகேய வித்தியாலய அதிபர் ந. சிவசுப்பிரமணியம், மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய அதிபர் திருமதி சு.சிவமலர், முறைசாராக் கல்வி செயற்றிட்ட அலுவலர் ந.சண்முகராஜா, கிராம அலுவலர் எஸ். வைத்தியநாதன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளனர். (ச)

# கனகரத்தினம் எம்.பியின் பாதுகாப்பை உறுதிப்படுத்த உரிய நடவடிக்கை

## இரா. சம்பந்தன் தகவல்

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியாவுக்கு வந்து ஓமந்தைப் பகுதியில் உள்ள இடைத்தங்கல் முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரத்தினத்தின் பாதுகாப்புக்காக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்திருக்கின்றார்.

பி.பி.சி. ஊடகவியலாளரிடம் நேற்று வெள்ளிக்கிழமை காலை இவ்வாறு தெரிவித்த சம்பந்தன், இது தொடர்பாக மேற்கொண்டிருக்கும் முயற்சிகள் தொடர்பாக அவர் விபரித்து கூற வில்லை. இது தொடர்பாக சம்பந்தன் மேலும் தெரிவித்ததாவது,

தான் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பெரும் துன்பத்தில் இருக்கும் நிலைமையில் தான் மட்டும் அங்கிருந்து பாதுகாப்பாக வெளியேறி விடுவதற்கு விரும்பாத நிலையிலேயே கனகரத்தினம் தொடர்ந்தும் வன்னியில் போர்ப்பகுதியில் தங்கியிருந்தார். இப்போது அங்குள்ள பொதுமக்கள் அனைவரும் வெளியேறியபோது அவரும் வெளியேறியிருப்பதாக அறிகின்றோம்.

அவரின் நிலைமைகள் தொடர்பாகவும் எமக்கு சில தகவல்கள் கிடைத்திருக்கின்றன. அவர் எந்த விதமான குற்றத்தை செய்தார் என்று எவராலும் குற்றம் சாட்ட முடியாது. அவர் தான் பிரதிநிதித்துவப்படுத்திய மக்களுடன் இறுதி வரையில் வாழ வேண்டும் என்பதற்காகத்தான் அங்கு இருந்திருக்கின்றார். அதனை விட அவர் வேறு எதுவும் குற்றத்தைச் செய்தார் என யாராலும் கூற முடியாது.

அவரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் நாம் சில நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றோம். ஆனால் அவை தொடர்பாக இப்போது பகிரங்கமாக கூறக்கூடிய நிலையில் நான் இல்லை. இந்த விடயத்தில் எம்முடைய முயற்சிகளை நாம் தொடர்ந்து கொண்டு வருவோம் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சம்பந்தன் தெரிவித்தார். (ச-5)

## வளர்ப்பு நாய்களுக்கான சத்திர சிகிச்சை முகாம்

(சாவகச்சேரி)

வளர்ப்பு நாய்களுக்கான கருத்தடை சத்திர சிகிச்சை முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை 9.00 மணி தொடக்கம் 12.00 மணி வரை சாவகச்சேரி கால்நடை வைத்திய நிலையத்தில் நடைபெறும். இதன்மூலம் வளர்ப்பு நாய்களுக்கான கருத்தடை சத்திர சிகிச்சை செய்து நாய்ப் பெருக்கத்தை கட்டுப்படுத்துவதினூடாக விலங்கு விசர் நோயை முற்றாக கட்டுப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு நல்குமாறு நகர சபை பொதுச் சுகாதார பரிசோத கர்கள் கேட்டுக் கொள்கிறார்கள். (ச-29)

## காலிறுதிப் பேட்டி

(யாழ்ப்பாணம்)

வீ.டி ஜெயரட்ண்சிங்கம் வெற்றிக் கிண்ணத்திற்கான கிரிக்கெட் சுற்றுத் தொடரில் 4 வது காலிறுதிப் போட்டி நாளை காலை 9.30 மணிக்கு யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறுகின்றது.

யாழ் . சென்ரல் விளையாட்டுக் கழகம் 6 ஆவது ஆண்டாக நட–த்தும் வீ .டி ஜெயரட்ணம் வெற்றிக்கிண்ணத்திற்கான 50 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுத் தொடரில் நாளை காலிறுதி ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணியும் யாழ். சென்ரல் விளையாட்டுக்கழக அணியும் மோதுகின்றன. (ச-5)

## நற்பண்பு செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் புண்ணிய கிராம வேலைத்திட்டத்தைச் செயற்படுத்தும் ஒரு நாள் நற்பண்புச் செயலமர்வு தொடர்பான நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு கோண்டாவில் நெட்டிலிப்பாய் ஶ்ரீகணேசா அறநெறிப்பாடசாலையில் இந்து கலாசார அபிவிருத்தி உதவியாளர் திருமதி மகிந்தினி விஜயகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் கலந்து கொள்கிறார். சிறப்பு விருந்தினர்களாக கிராமசேவையாளர் ந.சர்வகுண சீலன், கோண்டாவில் இந்து மகா வித்தியாலய அதிபர் சு.சண்முககுமார் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச- 3, 14)


**ஐரோப்பிய நாட்டில் பட்டப்படிப்பு**

(பகுதி நேர வேலையுடன்)

KAUNAS UNIVERSITY IN LITHVANIA

குறைந்த செலவுடன் STUDENT VISA

(Europian union country) France, Germany, Swiss, Nethaland, UK ஆகிய நாடுகளுக்கு பல்கலைக்கழகத்திலிருந்து விசா இன்றிச் செல்லலாம்.

Degree courses (I) Bachelor of Engineering (4 yrs)
(II)Bachelor of Management/ Accounting

*தகைமைகள்:* (18 - 26 வயது வரை) G.C.E. O/L, A/L, Passport உள்ளவர்களுக்கு முதலிடம். விண்ணப்ப முடிவுத் திகதி 28.05.2009. தொடர்பு:- திருமதி ல.விஸ்வலிங்கம் *(தொ.நு கல்லூரி விரிவுரையாளர்)* தொ.பே. 0776569276. நவாலி தெற்கு, நவாலி. (2761)



**காணவில்லை**

ஆடியபாதம் வீதியில் கொக்குவில் சந்திக்கு அண்மையாக நீலநிற (HONDA 50- LANCER) மோட்டார்சைக்கிள் காணாமல் போய்விட்டது. அடிச்சட்ட இல:-50-0491832
இயந்திர இல:- 50E- 0491646
வாகன இல:- 500-9658
மேற்படி மோட்டார் சைக்கிள் தொடர்பான விபரங்களை அறியத் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்புகளுக்கு TP:-021- 2222669, 077 7737072
இல.192, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (2764)

# இன்று ஒரு தகவல்

## மாரடைப்பு

நேற்று வரைக்கும் நன்றாகப் பேசிக் கொண்டிருந்தவர்கள் இன்றைக்குத் திடீரென்று காணாமல் போய் விடுகிறார்கள்.

என்னவென்று விசாரித்தால் அவர் மாரடைப்பினால் மரணமடைந்ததாக கூறுகிறார்கள். மாரடைப்பினால் ஏற்படும் மரணம் தற்பொழுது அதிகமாகிக் கொண்டு வருகிறது என்பதை டாக்டர்களே ஒத்துக்கொள்கிறார்கள்.

மாரடைப்பு ஏற்படுவதற்கு என்ன காரணம்? இரத்தத்தில் கொழுப்பு அதிகமாக சேர்வது, புகை பிடிப்பது, நுரையீரல் பாதிக்கப்படுவது இவையெல்லாம் தான்.

கட்டுப்பாடற்ற நீரிழிவுநோய், உடல் எடை அதிகரிப்பு, சிறுநீரகக்கோளாறு, உயர் இரத்த அழுத்தம் இவையெல்லாம் மாரடைப்பு ஏற்பட முக்கியமான காரணங்கள்.

இரத்தத்தில் அதிகமாகக் கொழுப்பு சேர்ந்தால் இதய நாளத்தில் அடைப்பு ஏற்படுகிறது. அதனால் மாரடைப்பு வருகிறது.

இதய நோய் வராமலிருக்க வேண்டுமானால் நாம் எப்படி நடந்து கெள்ள வேண்டும்? முதலில் உணவில் கட்டுப்பாடாக இருக்க வேண்டும். கொழுப்பு அதிகமுள்ள உணவுகளையும் மது –புகை என்பவற்றையும் விட்டு விட வேண்டும். உப்பைக் குறைக்க வேண்டும்.

பழம் – காய்கறி என்பவற்றை முடிந்தளவுக்கு பச்சையாகவே உண்பது நல்லது. திராட்சை, அப்பிள் போன்ற பழங்கள் சாப்பிடலாம். சூரியகாந்தி எண்ணெய் உபயோகப்படுத்தலாம். கொலஸ்ரோலைக் குறைப்பதற்கு பூண்டும் உதவும்.

கோபம், பயம், ஏமாற்றம் போன்ற மன உணர்வுகளாலும் இரத்தத்தில் கொழுப்பும் கொலஸ்ரோலும் உடனடியாக அதிகரிக்கிறதாம்.

முன்னெச்சரிக்கையாக அனைவரும் உடற்பயிற்சி செய்வது நல்லது. நடந்தாலே போதும், அதுவும் ஒரு நல்ல பயிற்சி.

நுட்பமான வேலைகளை உட்கார்ந்தே செய்பவர்களுக்கெல்லாம் உடற்பயிற்சி தேவை.

லண்டனில் J.N. மாரீஸ் என்று ஒரு டாக்டர் இருந்தார். அவர் ஒரு கணக்கு எடுத்துப் பார்த்து விட்டு சொல்கிறார்.

தபால் பிரிக்கிறவர்களை விட, தபால் கொடுப்பவர்களுக்கு மாரடைப்பு வரும் சாத்தியம் குறைவாம்.

அதனால் அலைந்து திரிந்து வேலை செய்பவர்கள் அலுத்துக் கொள்ள வேண்டாம். உற்சாகமாக இருங்கள்.

கொலஸ்ரோலைக் கட்டுப்படுத்த மூலிகை வைத்தியம் சில வழிகள் சொல்கிறது.

அறுகம்புல் அரைப்பிடி, 10 மிளகு இரண்டையும் சேர்த்து அரைத்து தண்ணீர் கலந்து தினமும் காலையில் குடித்து வரலாம்.

முள்ளங்கி, வாழைத்தண்டு அவியல் செய்து வாரத்துக்கு இரண்டு நாள் இரண்டு கப் அளவுக்கு சாப்பிடலாம்.

முருங்கை இலைச்சாறு அல்லது பூண்டு சேர்ந்த மிளகு ரசம் வாரத்துக்கு மூன்று நாள் சாப்பிடலாம்.

வெந்தயம், சீரகம், மஞ்சள்தூள் என்பவற்றை சிறிதளவு எடுத்து ஒரு கரண்டி துளசி இலைச்சாற்றுடன் கலந்து தினமும் ஒருவேளை சாப்பிடலாம்.

இஞ்சிச்சாறு, மிளகு, எலுமிச்சப்பழச்சாறு, தேன் என்பவற்றை கலந்து காலையில் வெறும் வயிற்றில் சாப்பிடலாம்.

ஒருவரின் வீட்டில் கொழுப்பு, எண்ணெய் இல்லாமல் சமையல் செய்வதில்லை. வீட்டுக்கார அம்மா எண்ணெய் தாராளமாக சேர்த்துக் கொள்வார்.

வீட்டுக்காரருக்கு ஹார்ட் அட்டாக் வந்துவிட்டது. ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

இரண்டு நாட்கள் கழித்து டாக்டர் அவரிடம்,

''இப்பொழுது தான் நீங்கள் ஆபத்தான கட்டத்தை தாண்டியிருக்கிறீர்கள்'' என்றார்.

அதற்கு அவர், ''இரண்டு நாட்களுக்கு முன்னரே தாண்டி விட்டேனே'' என்றார்.

"எப்படி?" என்று கேட்டார் டாக்டர்.

''வீட்டைவிட்டு வெளியில் வந்ததை சொன்னேன்'' என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டிய வடமராட்சி வலய மாணவர்கள்

(அல்வாய்)

மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டிய வடமராட்சி கல்வி வலய பாடசாலை மாணவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் முதல் இரு இடங்களைப் பெற்ற மாணவர்கள் மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்ற தகுதி பெற்றுள்ளதாகவும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மாவட்ட மட்டப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களின் பெயர் விபரம் பின் வருமாறு,

### 11 வயது ஆண்கள்

எஸ். மதுசாந் – 75 மீற்றர் –3 ஆம் இடம் - தேவரையாளி இந்துக் கல்லூரி, கே. கயோபன் – உயரம் – 1 ஆம் இடம் – தொண்டமனாறு வீ.ம.வி, வி. விதுசன் – உயரம் – 3ஆம் இடம் –வல்வை மகளிர் கல்லூரி.

### 13 வயது ஆண்கள்

கே. சிவகிரிசன் – 100 மீற்றர் – 200 மீற்றர் 1ஆம் இடம் – கரணவாய் ம.வி., ஆர். எஸ். விதுசன் – நீளம் பாய்தல் – 1ஆம் இடம் – கலட்டி. றோ. க.த.க.பாடசாலை, எஸ். தர்சன் உயரம் பாய்தல் 2ஆம் இடம் – ஹாட்லிக் கல்லூரி, அஞ்சலோட்டம் (4X100) – 1ம் இடம் – ஹாட்லிக் கல்லூரி.

### 15 வயது ஆண்கள்

ஆர். நிரோசன் – 100 மீற்றர் – 3 ஆம் இடம் – உடுப்பிட்டி அ.மி. கல்லூரி, கே. சிந்துஜன் – 400 மீற்றர் – 2ஆம் இடம் – அல்வாய் ஶ்ரீலங்கா வித்தி, கே. ஆரூரன் – குண்டெறிதல், தட்டெறிதல் – 2 ஆம் இடம் – ஹாட் லிக் கல்லூரி, அஞ்சலோட்டம் (4X100)– 3ஆம் இடம் உடுப்பிட்டி அ.மி.த. கல்லூரி.

### 17 வயது ஆண்

எஸ். அனுராஜ் – 100 மீற்றர் – 2ஆம் இடம் – ஹாட்லிக் கல்லூரி, ரி. தயாபரன் – 100 மீற்றர் – 3ஆம் இடம் – கம்பர் மலை, எஸ். ஜங்கரன் – 400 மீற்றர் – 2 ஆம் இடம் , 1500 மீற்றர் – 1ஆம் இடம், பி. தாஸ்மோகன் 400 மீற்றர் தடைதாண்டல் – 2ஆம் இடம், கரணவாய் ம.வி. ரி. கோபிராஜ் – நீளம்பாய்தல் – 2ஆம் இடம் – உடுப்பிட்டி அ.மி. கல்லூரி, வை. பிரசாந் – உயரம் – 1ஆம் இடம், பி. கிருஷ்ணானந்தன் – உயரம் – 3ஆம் இடம், நெல்லியடி ம.ம.வி. ரி. கோபிராஜ். மு.பாய்தல் – 3ஆம் இடம் உடுப்பிட்டி அ.மி. கல்லூரி. எஸ். தனஞ்சயன் – குண்டெறிதல் – 2ஆம் இடம் – ஹாட்லிக் கல்லூரி, ஆர். நிமலேந்திரன் – குண்டெறிதல் – 3 ஆம் இடம் – உடுப்பிட்டி அ. கல்லூரி, ஆர். அரிகரன் – குண்டெறிதல் – 3ஆம் இடம் – நெல்லியடி ம.ம.வி., ஆர். பத்மராஜன் – ஈட்டிஎறிதல் – 3 ஆம் இடம் – புலோலி. மெ. மி.க.பாடசாலை, அஞ்சலோட்டம் (4X100) – 2ஆம்இடம் – விக்னேஸ்வராக் கல்லூரி, 3ஆம் இடம் ஹாட்லிக் கல்லூரி.

### 19 வயது ஆண்கள்

எஸ். சுஜீதரன் – 400 மீற்றர் –1 ஆம் இடம், 800 மீற்றர் – 3 ஆம் இடம் – விக்னேஸ்வராக் கல்லூரி, எஸ். பிரசாந்த் – 1500 மீற்றர் 3 ஆம் இடம் – சிதம்பரக் கல்லூரி, ரி. ரவிராஜ் – 3000 மீற்றர் –3 ஆம் இடம் – ஹாட்லிக் கல்லூரி, வி. கரிகரன் – குண்டெறிதல், தட்டெறிதல் – 1ஆம் இடம்– ஹாட்லிக் கல்லூரி, எஸ். தர்சன் – கோலூன்றிப் பாய்தல் – 2 ஆம் இடம் – தும்பளை சிவ. ம.வி., அஞ்சலேரட்டம் (4X100) – 3 ஆம் இடம், (4X400) – 1 ஆம் இடம் – விக்னேஸ்வராக் கல்லூரி.

### 21 வயது ஆண்கள்

ஆர். ரவிக்குமார் – 100 மீற்றர் , 200 மீற்றர் – 1ஆம் இடம் – வேலாயுதம். ம.வி., வி. விக்னராஜ் –400 மீற்றர் – 2ஆம் இடம் –கே. நிஜிந்தன் – உயரம் – 3ஆம் இடம் – ஜ. உதயசீலன் – மு. பாய்தல் – 3 இடம்– உடுப்பிட்டி அ.மி.கல்லூரி,ஏ. ரவிக்குமார்– தட்டெறிதல் – 1 ஆம் இடம் – வேலாயுதம் ம.வி., ஆர். இராஜ்மோகன் – கோலூன்றிப் பாய்தல் – 3 ஆம் இடம், உடுப்பிட்டி அ.மி.கல்லூரி

### 11 வயதுப் பெண்கள்

ஏ. அபின்ஜா – 75 மீற்றர் 1ஆம் இடம் – உடுப்பிட்டி ம.கல்லூரி, ஆர். நிலாணா – 75 மீற்றர் – 2 ஆம் இடம் – தேவரையாளி இந்துக்கல்லூரி, ஏ. அபின்யா – 100 மீற்றர் – 2 ஆம் இடம், எஸ். சுஜிந்தா – நீளம் – 3 ஆம் இடம் – உடுப்பிட்டி ம.கல்லூரி,

### 13 வயதுப் பெண்கள்

எஸ். மலர்வாணி – 100 மீற்றர் – 2 ஆம் இடம் – வட இந்து மகளிர் கல்லூரி, எம். மாதுளா – 200 மீற்றர் – 3 ஆம் இடம் – உடுப்பிட்டி ம.கல்லூரி, அஞ்சலோட்டம் (4X100) 3 ஆம் இடம் – உடுப்பிட்டி ம.கல்லூரி

### 15 வயதுப் பெண்கள்

வி. யோகமாலினி – 100 மீற்றர் – 1 ஆம் இடம் – நீளம் பாய்தல், உயரம்பாய்தல் – 2ஆம் இடம் – வட இந்து மகளிர் கல்லூரி. எம். தர்மினி – 400 மீற்றர் – 2ஆம் இடம் – நெல்லியடி ம.ம.வி., ஐ. சந்திரிக்கா – உயரம் பாய்தல் – 3 ஆம் இடம் –மெ.பெ.உ. பாடசாலை, எம். சாமந்தி – குண்டெறிதல் – 1 ஆம் இடம் – நெல்லியடி ம.ம.வி., ரி. விதுசானா – தட்டெறிதல் – 2ஆம் இடம் – மெ.த.பெ.உ.பாடசாலை, பி. வகிர்தா – ஈட்டிஎறிதல் – 1ஆம் இடம் – கொற்றாவத்தை – அ.மி.த.கபாடசாலை., எஸ். ஞானகீர்த்தனா – ஈட்டி எறிதல் – 2ஆம் இடம் – வ.ம.ம. கல்லூரி, அஞ்சலோட்டம் (4X100) – 3 ஆம் இடம் – வட. இந்து. ம. கல்லூரி.

### 17 வயதுப் பெண்கள்

கே. சரண்யா– 400 மீற்றர் – 2 ஆம் இடம்- வல்வை. சிவகுரு வித்தி, கே. அபர்ணா – உயரம் – 2 ஆம் இடம் – கம்பர்மலை வித்தி, எஸ். ஜானகி – தட்டெறிதல்– 3 ஆம் இடம் , ஈட்டி எறிதல் – 1ஆம் இடம் – மெ.பெ.உ. பாடசாலை, கே. சத்துருஜா – ஈட்டிஎறிதல் – 3ஆம் இடம் – அல்வாய் ஶ்ரீலங்கா வித்தி, அஞ்சலோட்டம் (4X100)– 3 ஆம் இடம் – மெ.பெ.உ.பாடசாலை.

### 19 வயதுப் பெண்கள்

எஸ். புவிதா – 400 மீற்றர் – 3 ஆம் இடம்– மெ.பெ.உ.பாடசாலை, ய. உதய ரூபினி – ஈட்டி எறிதல் – 3 ஆம் இடம்– இமையாணன் அ.த.க. வித்தி, எம். வேனுரங்கா – கோலூன்றிப் பாய்தல் – 2 ஆம் இடம் – விக்னேஸ்வராக் கல்லூரி, ஜே. பூரணி – 800 மீற்றர் – 3ஆம் இடம் – 1500 மீற்றர் – 2 ஆம் இடம் – மெ.பெ.உ. பாடசாலை, எஸ். கவிப்பிரியா – நீளம் பாய்தல் – 1 ஆம் இடம்– நெல்லியடி ம.வி., ரி. பிரதீபா – முப்பாய்ச்சல் – 3 ஆம் இடம் – வி. ஜனனி – தட்டெறிதல் – 3 ஆம் இடம் – மெதடிஸ்த பெ. உ. பாட்சாலை.

(ஓ–19)

# இராசி பலன்

**23.05.2009**

*(வைகாசி 09, சனிக்கிழமை*
*சதுர்த்தசி முன்னிரவு 08.29 மணிவரை*
*பரணி முன்னிரவு 8.34 மணிவரை*
*இராகுகாலம் 8.52-10.22 மணிவரை*
*சுபநேரம் 2.52-4.22 மணிவரை*
*போதாயன அமாவாசை*
*சித்தாமிர்தம்.*

| | |
|---|---|
| மேடம் | நண்பர்கள் வருகை, விருந்துபசாரம், கற்பனை மிகுதி, தேக நலன். |
| இடபம் | உஷ்ண வியாதி, அமைதிக் குறைவு, தொழில் சிந்தை, உறவினர் சந்திப்பு. |
| மிதுனம் | குதூகலம், காரிய அனுகூலம், தன தானிய சேர்க்கை, ஆரோக்கியம். |
| கடகம் | நன்கொடை, அறிஞர்கள் சந்திப்பு, முயற்சி கைகூடும், போசன சுகம். |
| சிங்கம் | தொழில் சிந்தை, பிரயாணம், எதிர்பாராத செலவு, கட்டுப்பாடு. |
| கன்னி | அபகீர்த்தி, வேலைத்தடங்கல், பணக்குறைவு, வாகன பயம். |
| துலாம் | குடும்ப மகிழ்ச்சி, எடுத்த காரியம் கைகூடும், விருந்துபசாரம், பொருள்சேர்க்கை. |
| விருச்சிகம் | ஜனவசியம், முயற்சி கைகூடும், உடல்நலம், நல்ல செய்தி. |
| தனுசு | வாக்கு மேன்மை, பெரியோர் உதவி, உடல் நலக்குறைவு, பண விரயம். |
| மகரம் | மனச்சஞ்சலம், முயற்சி தாமதம், ரோக நிலை, தாய்வழி உறவு. |
| கும்பம் | இஷ்ட சித்தி, மனோதைரியம், தனவருவாய், சகோதரர் உதவி. |
| மீனம் | போசன சுகக்குறைவு, கௌரவக் குறைவு, தொழில் மந்தம், எதிர்பாராத நன்மை. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 110 | 140 | 150 |
| பச்சைமிளகாய் | 40 | 50 | 50 |
| தக்காளி | 340 | 370 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 80 | 60 |
| கோவா | 40 | 55 | 50 |
| கரட் | 70 | 100 | 60 |
| பூசணி | 15-40 | 20-40 | 20-50 |
| புடோல் | 60 | 80 | 50 |
| வாழைக்காய் | 40 | 65 | 60 |
| சின்ன வெங்காயம் | 40 | 70 | 40 |
| பெரிய வெங்காயம் | 140 | 170 | 160 |
| பாகற்காய் | 100 | 120 | 80 |
| வெண்டிக்காய் | 80 | 90 | 60 |
| கரணைக் கிழங்கு | 35 | 50 | 50 |
| பயிற்றங்காய் | 100 | 140 | 100 |
| லீக்ஸ் | 100 | 130 | 120 |
| பீற்றூட் | 35 | 40 | 40 |
| கறிமிளகாய் | 120 | 140 | 120 |
| முருங்கைக்காய் | 200 | 800 | 600 |
| கீரை – 1 பிடி | 10 | 25 | 20 |
| தேசிக்காய் | 100 | 135 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 20 | 35 | 30 |

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மயிலணி- திருக்குடவாயில் விசாலாட்சி அம்பாள் சமேத ஸ்ரீ விஸ்வநாத சுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் யூன் மாதம் 3 ஆம் திகதி மாலை 5மணிக்கு சப்பறமும் , 4 ஆம் திகதி காலை 9 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (ஓ-4)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

இணுவில் கந்தசாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் யூன் மாதம் 20 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் மாலை 6.30 மணிக்கு சப்பறமும் 21 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை காலை 9 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (ஓ-4)

## மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரி மாணவமுதல்வர் சபையால் மறைந்த முன்னாள் மாணவ முதல்வர் அமரர் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் மென்பந்துச் சுற்றுப்போட்டி யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

போட்டியில் பங்கேற்க விரும்பும் அணிகள் யாழ்.மத்திய கல்லூரி மாணவ முதல்வர் சபையினரிடம் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ஓ-6)

## உலக உணவுத்திட்டத்தின் மே மாத நிவாரண விநியோகம்

(யாழ்ப்பாணம்)

உலக உணவுத்திட்டத்தின் கீழ் தொழில் ரீதியாகப் பாதிக்கப்பட்டோர், 11.08.2006 இன் பின் இடம்பெயர்ந்தோருக்கான மே மாத நிவாரண வழங்கலின் கீழ் மே மாதத்திற்கான வழங்கற் கட்டளைகள் மாவட்டச் செயலகத்திலுள்ள உலக உணவுத் திட்ட மாவட்ட முகாமைத்துவப் பிரிவில் இருந்து இன்று சகல ப.நோ.கூ. சங்கங்களுக்கும் வழங்கப்படவுள்ளது.

எனவே ப.நோ.கூ. சங்கங்கள் மாவட்ட முகாமைத்துவப் பிரிவில் இருந்து வழங்கற் கட்டளையைப் பெற்று ஒரு வார காலத்திற்குள் களஞ்சியத்திலிருந்து உணவுப் பொருட்களை முழுமையாகப் பெற்று விநியோக நடவடிக்கையினை எதிர்வரும் 28 ஆம் திகதி ஆரம்பிக்குமாறு அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (ஓ)

## இலங்கை இலக்கியப் பேரவையின் 2008 ஆம் ஆண்டுக்கான விருதுவழங்கல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை இலக்கியப் பேரவையால் ஒவ்வொரு வருடமும் சிறுகதை, கவிதை, நாடகம், சமயம், சிறுவர் இலக்கியம், பல்துறை, காவியம், ஆய்வு, மொழிபெயர்ப்பு (வேற்று மொழியிலிருந்து தமிழில்) போன்ற துறைசார்ந்த நூல்களுக்கான விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில், 2008 ஆம் ஆண்டில் வெளிவந்த மேற்படி துறைசார்ந்த நூல்களுக்கு விருதுகள் வழங்கப்பட இருப்பதனால் இவ்வாண்டில் வெளியிடப்பட்ட குறிப்பிட்ட துறை சார்ந்த நுல்களின் நூலாசிரியர்கள் தமது நூலின் ஒரு பிரதியை விருதின் தேர்வுக்காக சி.சிவதாசன் செயலாளர், இலங்கை இலக்கியப் பேரவை இல58, கனகரத்தினம் வீதி, அரியாலை யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் யூன்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு இலங்கை இலக்கிய பேரவைச் செயலாளர் சி.சிவதாசன் கேட்டுக்கொள்கின்றார். (ஓ-4)

## மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குகொள்ளும் அணிகளுக்கான பயிற்சிமுகாம்

(அல்வாய்)

மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குகொள்ளும் வடமராட்சி கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கான பயிற்சி முகாம்கள் நடைபெற்று வருகின்றன.

இதில் கலட்டி றோ.க.ஆண்கள் பாடசாலையில் 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கபடி பயிற்சி முகாம் இன்று சனிக்கிழமை திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகத்திலும், மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலையின் 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான வலைப்பந்து பயிற்சி முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை வட இந்து மகளிர் கல்லூரியிலும், உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியின் 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கரப்பந்து பயிற்சி முகாம் 25 ஆம் திகதி திங்கட்கிழமை உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியிலும்,நெல்லியடி மத்திய மகாவித்தியாலய 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டப் பயிற்சி முகாம் மற்றும் 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான எல்லே பயிற்சிமுகாம் ஆகியன முறையே 26,27 ஆம் திகதிகளில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகத்திலும் நடைபெறவுள்ளது.

மேலும் ஹாட்லிக் கல்லூரியின் 19 வயது, 15 வயது பிரிவு ஆண்களுக்கான மற்றும் வட இந்து மகளிர் கல்லூரியின் 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான சதுரங்க பயிற்சி முகாம்கள் 28 ஆம் திகதி வியாழக்கிழமை வட இந்து மகளிர் கல்லூரியிலும் மணற்காடு றோ. க. பாடசாலையின் 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான எல்லே பயிற்சி முகாம் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்.குடத்தனை அ.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

பயிற்சிக்கு சமுகம் தரும் மாணவர்கள் பயிற்சிக்குரிய சீருடையுடன் காலை 7.30 மணிக்கு முன்பு தத்தமது பொறுப்பாசிரியருடனும் தேவையான உபகரணங்களுடனும் வருகை தருமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுக் கொள்கின்றார். (ஓ-6-19)

## கிணற்றில் வீழ்ந்த இளைஞர் மரணம்

கிணற்றில் தவறுதலாக வீழ்ந்த இளைஞர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

சங்கானை சலேசியார் வீதி, சிவன் கோவிலடியைச் சேர்ந்த ஜோசப் -ரஜனதாஸ் (வயது 35) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.


இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, குறித்த இளைஞன் புத்தி சுவாதீனம் அற்ற இளைஞன் எனவும் அவர் நேற்று முன்தினம் இரவு தவறுதலாக கிணற் றில் வீழ்ந்து உயிரிழந்துள்ளார் எனவும் நேற்றுக் காலையிலேயே அவரது சடலத் தினை உறவினர் கண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக கிராமசேவகர் ஊடாக மானிப்பாய் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்ததைத் தொடர்ந்து அவர்கள் விசாரணைகளை மேற்கொண்டனர். (ஓ)

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளது என தென்மராச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஓ-4-29)




## யாழ்.செய்திகள்

## தளபாட திருத்த வேலைகள் தொடர்பான விளக்கக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் தளபாட திருத்த வேலைகள் தொடர்பிலான விளக்கமளிக்கும் கூட்டம் நாளை மறுநாள் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கடந்த 20 ஆம் திகதி புதன்கிழமை கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்த அனைத்து அதிபர்களையும் சமுகமளிக்குமாறு யாழ். வலயக்கல்வி அலுவலகப் பாடசாலை வேலைப் பகுதி பொறியியலாளர் ஜி. சிவபாலன் கேட்டுக் கொள்கின்றார். (ஓ)

## கலந்துரையாடல்

(கோண்டாவில்)

2009 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் நல்லூர் பிரதேச செலயகத்தினால் இருபத்திரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

முதல்கட்ட திட்டங்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஓ-36)

## சட்டவிரோத மது உற்பத்தியில் ஈடுபட்டவர்களுக்கு ரூபா 2 இலட்சம் அபராதம்

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோத மது உற்பத்தியில் ஈடுபட்ட இருவருக்கு ரூபா 2 இலட்சம் அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

யாழ்.மாநககரசபை எல்லைக்குட்பட்ட உரும்பிராய் மேற்கு, யாழ்ப்பாணம் மடம் வீதி ஆகிய பிரதேசங்களில் சட்டவிரோத மது உற்பத்தியில் ஈடுபட்ட இருவரை கோப்பாய் பொலிஸார் மற்றும் மதுவரித் திணைக்களத்தினர் சட்டவிரோத மதுபானம் உற்பத்தி செய்யும் பொருட்களுடன் கைதுசெய்து கடந்த வியாழனன்று யாழ்ப்பாண நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

இவ் வழக்கினை விசாரணை செய்த நீதிவான் ஆர்.வசந்தசேனன், சட்டவிரோத குற்றச் செயலில் ஈடுபட்ட குற்றவாளிகளுக்கு ரூபா 2 இலட்சம் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (ஓ-7)

## அரச அதிபர் கிண்ணத்திற்கான —அரையிறுதிப் போட்டிகள்—

(யாழ்ப்பாணம்)

அரச அதிபர் கிண்ணம்-2009 இற்கான அரையிறுதிப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8மணிக்கு அரியாலை சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் யாழ். மாவட்டச் செயலக நலன்புரிக்கழகத் தலைவர் ம.வித்தியானந்தநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

முதலாவது அரையிறுதிப் போட்டி காலை 8.30 மணிக்கு மாவட்டச் செயலக அணிக்கும், பருத்தித்துறை பிரதேச செயலக அணிக்குமிடையில் நடைபெறும். இந்நிகழ்வினை மேலதிக அரசாங்க அதிபர் (நிதி) சு. சண்முகரட்ணம் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இரண்டாவது அரையிறுதிப் போட்டி மாலை 2 மணிக்கு உடுவில் பிரதேச செயலக அணிக்கும், தெல்லிப்பளை பிரதேச செயலக அணிக்குமிடையில் நடைபெறும். இந்நிகழ்வினை திட்டப் பணிப்பாளர் திருமதி ஆர். மோகனேஸ்வரன் ஆரம்பித்து வைக்கவுள்ளார். (ஓ)






உலக புத்தக தினமும் நூலக வாரமும் நிகழ்வுகள் அண்மையில் நல்லூர் பிரதேச்சபையின் கொக்குவில் பொதுநூலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் லதா உமாசங்கர் மங்கல விளக்கேற்றுவதையும், கொக்குவில் பொது நூலகர் திருமதி பூ.பாலபாஸ்கரன், யாழ்.தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் ஆகியோர் உரையாற்றுவதையும், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.கந்தசாமி "கொக்கூர் சுட்டி" எனும் நூலை வெளியிட்டு வைப்பதையும் படங்களில் காணலாம்.

# மொழி-இலக்கியம்-பண்பாடு 04

"நீ ஏன் அப்படிச் செய்தாய்?" என்னும் வாக்கியத்தினைக் கூறும்போது கோபம், அன்பு, கழிவிரக்கம், அற்புதம் போன்ற உணர்வுகளை முகபாவத்தினாலே தோற்ற வைத்து அவ் வினாவினை நாம் கேட்கலாம். ஓசை வேறுபாடும்இவ்விடங்களிலே தோன்றும். இவை யாவற்றையும் எழுத்திலேயே நாம் வடிக்க முடியாது.

ஆனால் எழுத்து மூலமான கருத்துத் தொடர்பிலே சிற்சில சிறப்புக்களும் காணப்படுகின்றன. பேச்சு மொழியிலே ஒரே மாதிரி ஒலிக்கும் இரு சொற்களை எழுத்துமொழி நன்கு வேறுபடுத்திக் காண்பித்துவிடும். உதாரணமாக ஆங்கில மொழியிலே Meat: Meet என்னும் சொற்கள் ஒரே மாதிரியாகவே உச்சரிக்கப்படுகின்றன. ஆனால் எழுதும் போது அவை வேறுபடுத்திக் காட்டப்படுகின்றன.

**2.இலக்கியம் என்றால் என்ன?**

இவ்விடத்தில் பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை இலக்கியம் பற்றிக்கூறியதை பயன் கருதி அப்படியே இங்கு தருகிறேன்.

இலக்கியம் என்பது ஒரு கலை (art). இக் கலை கலைஞன் உள்ளத்தில் தோன்றும் முறை தனிப்பட்டது. இலக்கியமாகப் பரிணமிக்கும் முறையும் தனிப்பட்டது ; இதன் நோக்கமும் தனிப்பட்டதே. இதனோடு முற்றும் வேறுபட்டது சாஸ்திரம். இது தோன்றும் முறையும், வெளியாகும் முறையும், இதன் நோக்கமும் கலைக்குரியவற்றினின்றும் பெரிதும் வேறுபட்டவையாகும்.

'கலை' என்று கூறப்படுவதற்கு அழகு உணர்ச்சியும் இன்புறுத்தும் நோக்கமும் இன்றியமையாதவை. 'சாஸ்திரம்' என்று கூறப்படுவதற்கு இவ்விரண்டும் இன்றியமையாதனவல்ல. அறிவிற்குரிய விஷயங்களைத் தருதலே முக்கிய நோக்கமாகும். ஒரு மாளிகைக்கு இரண்டு வகையான படங்களை வரைதல் கூடும். ஒன்று ஓவியப் புலவன் தீட்டும் மாளிகைச் சித்திரம் இன்னொன்று மாளிகை அமைக்கும் கொற்றன் (Architect) வரைந்து கொள்ளும் அமைப்புப் படம் (Plan). சித்திரத்திற்கும் படத்திற்கும் உள்ள வேறுபாடு கலைக்கும் சாஸ்திரத்திற்கும் உண்டு.

கம்பராமாயணத்தை எடுத்துக்கொள்வோம். இது ஒரு கலைக்காவியம்.இதிலே, "அழகு-உணர்ச்சி ததும்புகிறதா? காவிய இன்பம் சிறந்தோங்குகிறதா?" என்ற கேள்விகளே எழும். இதனோடு தொல்காப்பியத்தை ஒப்பிடுவோம்.

இப் பெருநூல் பற்றி, "தமிழ் மொழியின் உண்மையியல்பை இது சரியாகத் தவறின்றித் தெரிவிக்கின்றதா?" என்ற கேள்வி தான் உண்டாகும். இது ஒரு சாஸ்திரம். உள்ளத்தை உணர்ச்சி வழியில் இயக்குவது கலை என்றும், மக்களுக்கு அறிவுப் பொருள்களைக் கற்பிப்பதும் சாஸ்திரம் என்றும் ஆசிரியர் டிக்வின்ஸி கூறியுள்ளார். இவர் கூறியுள்ளதன் திரண்ட கருத்து வருமாறு.

இலக்கியம் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது (கலை) உள்ளத்தை இயக்கும் ஆற்றல் படைத்துள்ளது.பிற எல்லாம் (சாஸ்திரம்) அறிவுப் பொருட்களைப் பரப்புவது. எழுதப்படுவன எல்லாம் இலக்கியம் என்று பொதுவாகத் தொகுத்து வழங்குகிறோம். இவற்றிலே இரண்டு இயல்புகளைக் காணலாம்.

அவ்விரண்டு இயல்புகளும் கலந்து தோன்றுதல் காணப்படினும், தனித்தனியாகப் பிரித்து உணர்வதற்கும் இவை இடந்தருகின்றன. ஏனென்றால், இவற்றில் ஒன்று மற்றொன்றோடு சிறிதும் இணங்காதபடி அதனைத் தூரத்தே அகற்றி நிறுத்தமுயல்கிறது. இவற்றுள் ஒன்றை அறிவிலக்கியம் (Literature of Knowledge) என்றும், மற்றொன்றை ஆற்றல்-இலக்கியம் (Literature of Power) என்றும் வழங்கலாம். அறிவிலக்கியம் அறிவுப்பொருள்களைத் தரமுயல்கிறது. ஆற்றல் – இலக்கியம் உள்ளத்தை ஊக்குவிக்க முயல்கிறது.

முன்னது புலனறிவை விருத்தி செய்வது; பின்னது, உணர்ச்சியின் மூலமாக போதத்தைத் துணையாகக் கொண்டு ஆன்மாவையே இயக்குகிறது.

அறிவிலக்கியத்தை மதிப்பிடுவதற்கு, "அதிற் கூறப்பட்டன சரியா? உண்மையா? தருக்க நெறியோடு பொருந்துமா?" என்று நோக்குதல் வேண்டும்.

ஆற்றல் இலக்கி யத்தை மதிப்பிடு வதற்கு, "கலையுணர்ச்சி யைத் திருப்தி செய்கிறதா? அழகுணர்சசி இருக்கிறதா? இன்பம் விளைவிக்கிறதா?" என நோக்குதல் வேண்டும்.

ஆனால் இருவகை இலக்கிய இயல்புகளும் ஒரு சேரக் கலந்து வரும் சிறந்த இலக்கியங்களும் உள்ளன. திருவள்ளுவரது திருக்குறள் இவ் வகைக் கலப்பு இலக்கியங்களுக்குச் சிறந்த உதாரணமாம்.

இருவகை இலக்கியம் பற்றிப் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை கூறியதை இதுவரை பார்த்தோம்.

தொடக்கத்தில் வாய்மொழி மரபாக இருந்து வந்த இலக்கியம் பின்னர் எழுத்துருவம் பெற்றது. மொழிகளில் எழுத்து வடிவம் ஏற்பட்ட காலத்திலேயே இலக்கியம் எழுத்துருவம் பெற்றிருக்கும் என்று கூறுவதற்கில்லை. மீண்டும் மீண்டும் கூறிப் பலர் வாய்மொழியூடாகத் தொடர்ந்து பரவும்வேளையில், நினைவாற்றலால் பாதுகாக்க முடியாத நிலையில் அவ்விலக்கியத்தை எழுத்தில் அமைக்கும் முயற்சி தோன்றியிருக்கக் கூடும் என எண்ணலாம்.



கிரேக்க இலக்கியம் கி.மு. ஏழாம் நூற்றாண்டு முதல் எழுத்து வடிவம் பெற்றதாக அமைந்தது. தெசலே பள்ளத்தாக்கில், ஒலிம்பிக் மலைகளின் காட்சியால் ஏற்பட்ட கற்பனைத் தூண்டுதல், கடவுளர்,வீரர் பற்றிய பல பாடல்களைத் தோற்றுவித்தது. இவை கி.மு. 700 அளவில் ஆசியப் பெருங்கண்டத்தின் வியாபாரிகளின் பீனிஷியன் வரி வடிவில் எழுதப்பட்டன.

மெசபொதேமியா ,எகிப்து போன்ற பழமையான நாகரிக நாடுகள்,இதனினும் முன்பே பண்பட்ட இலக்கியங்களைக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது.


**பேராசிரியர் அ.சண்முகதாஸ்**

கி.மு.2300 அளவிலான களிமண் ஏடுகள் முப்பதினாயிரம், மெசபொ தேமிய இலக்கியம் வரலாறு பற்றி அறியத் துணைநிற்கின்றன. அவ்வாறே பைப்பைரஸ், தோல்,மர ஏடுகள் போன்றவற்றில் எழுதப்பட்ட எகிப்திய இலக்கியம் கி.மு.1358 க்கும் மிக முந்தியதாக அமைகின்றது.

அவ்வாறே எபிரேய மொழியில் எழுந்த யூதரின் இலக்கியம் கி.மு. 1000 முதல் 300 அளவிலான விவிலிய முதற் பகுதியாகிப் பழமையுடையதாக விளங்குகின்றது. கி.மு. இரண்டாம் நூற்றாண்டின் பிளாட்டசின் நாடகங்கள்,ரோம இலக்கியத்தின் பழமைக்கு எடுத்துக்காட்டுகளாகின்றன. (தொடரும்)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

# அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை



ஔமா அவருக்குத் தன் மனத்தில் எழுந்ததைக் கூறி வைத்தாள்.

"றோயும் நானும் வயது வந்தவர்கள். எங்களுக்கென்று ஏற்பட்ட பாதைகள், ஞாபகங்கள் எல்லாம் இருக்கின்றன. எங்களுக்கு நடந்த எதையும் அழித்து எழுத முடியாது. ஆனால் ஜோர்ஜ் ஒருகுழந்தை ஒன்றுமறியாதவன். எழுதப்படாத Slate. அவனுக்கு நல்லதைச் செய்ய உங்களுக்குச் சரியான சந்தர்ப்பம் உள்ளது'' என்றாள். இவற்றிற்கெல்லாம் அவரின் பதில் தலையாட்டியது தான்.

அவரின் விஜயத்தின் இறுதிநாள். ஔமாவுக்கு நல்ல விருந்தளித்தார். அவளின் எதிர்காலம் பற்றிப் பேசினார். பணம் தேவைப்படும் என்று கூறி அவளை வற்புறுத்தி பணம் கொடுத்தார். ஔமா தன் படிப்பை முடித்துக் கொண்டு கென்யா திரும்பியதும், அவளுக்கு நல்ல உகந்த வரனைத் தேடி மணமுடித்துத் தரப் போவதாகவும் கூறினார்.

இந்த இடத்தில் ஔமாவின் கண்ணீர் துளிர்த்தது. கடந்துபோன வீணான காலங்களுக்கு வேதனைப்பட்டவராக அதற்கு ஈடு செய்யும் முயற்சிதான் இது.

இந்தக் காலத்தில் தான் அவர் ஓர் இளம் பெண்ணோடு வாழ்ந்து 'ஜோர்ஜ்' என்ற ஆண் குழந்தைக்குத் தந்தையானார்.

சிறிதுநேரம் ஔமா தந்தையின் புகைப் படத்தைக் கூர்ந்து பார்த்தாள். எழுந்து யன்னல் அருகில் சென்று நின்றாள். அவளின் பின் பக்கம் ஒபாமா இருந்தார். அவளின் உடல் நடுங்கியது. ஒபாமா எழுந்து வந்து அவளை அரவணைத்தார். அவள் விம்மி விம்மி அழுதாள்.

தாங்கொணாத் துன்பம் கண்ணீராக பெருக்கெடுத்து அலை அலையாகக் கொட்டியது.ஔமா அண்ணனைப் பார்த்து கூறினாள் ,

''இப்போது தான் தந்தையைப் பற்றி அறியத் தலைப்படுகிறேன். தன்னைப் பற்றி அவர் விளக்கியிருக்கக் கூடிய ஒரு கட்டத்துக்கு வந்த போதுதான் அவர் இறந்துவிட்டார். நான் ஏமாற்றப்பட்டுவிட்டேன் நீயும் தான்..." என்று முடித்தாள்.

தனது மனத் திண்மையின் சக்தியால் உந்தப்பட்டவள் போல் சடுதியாகத் தன்னைச் சுதாகரித்துக் கொண்டாள். அணிந்திருந்த ஆடையின் நுனியால் கண்ணீரைத் துடைத்தாள். பலவீனமான சிரிப்புடன் ஒபாமாவைப் பார்த்து பின்வருமாறு கூறினாள்.

கிழவர் உன்னைப் பற்றித்தான் அதிகமாகப் பேசிக் கொண்டிருப்பார். உனது படத்தை எல்லோருக்கும் காட்டி நீ படிப்பில் பெரிய சுட்டி என்று பெருமைப்படுவார். உன் அம்மாவும் அவரும் கடிதத் தொடர்பு வைத்திருந்தார்கள் என்று எண்ணத் தோன்றுகிறது. அந்தக் கடிதங்கள் அவருக்கு ஆறுதல் அளித்தன. அவரது அவஸ்தையான காலங்களில், பலரும் அவருக்கெதிராகத் திரும்பிய நிலையில் அந்தக் கடிதங்களை எனக்கு உரத்து வாசித்துக் காட்டுவார்.

சிலவேளைகளில் நான் நித்திரையாகக் கிடந்தால் என்னையெழுப்பி அவற்றைக் கேட்கச் செய்வார். வாசித்து முடிந்ததும் கடிதங்களைக் கையிலேந்திய வண்ணம் "உன் அம்மா எவ்வளவு அன்பும் பாசமும் உள்ளவள்" என்று அங்கலாய்ப்பார்.

"என்னைப் பற்றிக் கவலைப்பட எனக்கும் ஆட்கள் இருக்கிறார்கள் தானே'' என்று அடிக்கடி தனக்குத் தானே சொல்லிக் கொள்வார் என்று நிறுத்தினாள் ஔமா.

66

ஒபாமா அவளுடைய படுக்கையைச்சரிசெய்து கொடுத்ததும் ஔமா கம்பளிப் போர்வையின் கீழ்ப் படுத்து ஆழ்ந்த நித்திரைக்கு ஆளானாள். ஆனால் ஒபாமாவுக்கு நித்திரை வரவில்லை. தங்கையின் சாந்தமான முகமண்டலம் , தாளத்துக்கேற்ற அவளின் மூச்சு ஆகியவற்றை அவதானித்துக் கொண்டு அவள் கூறிய கதையிலிருந்து பெறப்படுவது என்ன என்று சிந்தித்தார்.

அவரின் உலகம் தலைகீழாக மாறிவிட்டது. வாழ்நாள் முழுவதும் தான் சுமந்து நின்றது தந்தையின் ஒரே மாதிரியான உருவம். தானும் அந்த உருவத்தைத் தான் தாங்கி நிற்பதாக எண்ணியிருந்தார். தலைசிறந்த மேதை, நன்கு பழகும் நண்பன், நிமிர்ந்து நின்று குரல் கொடுக்கக் கூடிய தலைவன் – தன் தந்தை. இவையும் இன்னும் பல குணாதிசயங்களையும் கொண்ட குணக்குன்று. ஒபாமா அவர் பற்றிக் கட்டியெழுப்பி வைத்துள்ள உருவத்தை தகர்க்க இதுவரை எதுவும் நிகழவில்லை.

**ஜம்பொன்**

பலர் தங்கள் தந்தையர்கள் வயோதிபம் அடைந்து உடல் சுருங்குவதையும், அவர்கள் கண்ட கனவுகள் உடைந்து போவதையும் கவலையாலும்,கழிவிரக்கத்தாலும் ஏற்பட்ட ரேகைகளையும் கண்டுள்ளனர். ஆனால் அத்தகைய காட்சிகள் எதுவும் ஒபாமாவுக்குக் கிடைக்க வாய்ப்பில்லாமல் போனது தான், ஒருவேளை அவரின் தந்தையின் உருவம் மாறாமலிருந்ததற்குக் காரணமோ? (தொடரும்)

# யாழ்.பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள கணனி மூலமான வியாபார முகாமைத்துவ மாணி கற்கைநெறி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடத்தினால் ஆரம்பிக்கப்படவிருக்கும் வியாபார முகாமைத்துவமாணி Online மூலமான கற்கைநெறிக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பம் கோரப்படவுள்ளது.

இது ஒரு இணையவழிக் கற்கை (Online Programme) நெறியாக இருந்தபோதும் ஆரம்பத்தில் எதிர்நோக்கப்படும் வசதியீனங்கள் காரணமாக நேருக்கு நேரான தொடர்பாடல், அச்சடித்த பாடக்குறிப்புக்கள் என்பவற்றுடன் இணைந்ததாகவே இக் கற்கை நெறி ஆரம்பிக்கப்படும். தொலைக்கல்வி மூலமான இக் கற்கை நெறி நவீனதொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப Online மூலமான கற்றல் முறைமையை அடிப்படையாகக் கொண்டது.

Online முறைமையை முக்கியமாகக் கொண்டமையால் ஒவ்வொரு பாட அலகினதும் பாடத் திட்டத்துக் குரிய சகல அலகுகளும் மாணவர் களுக்கு Website ஊடாக வழங்கப்படும். மேலும் பயிற்சிப் பட்டறைகள், அறிவுறுத்தல்கள், கட்டுரைப் பரீட்சைகள் போன்றவையும் Online மூலம் வழங்கப்படும் Online மூலமான கற்கை நெறியாதலால் மாணவர்கள் தாம் விரும்பிய நேரங்களிலும், ஓய்வுநேரங்களிலும் இக் கற்கை நெறியைப் பயில முடியும்.

அத்துடன் மாணவர்களும், விரிவுரையாளர்களும் நேருக்குநேர் சந்திக்கும் சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. இதில் இணைந்து கொள்ளும் மாணவர்கள் அனைவரும் தமது சொந்த வழிகாட்டலின் அடிப்படையிலேயே கல்வியைத் தொடர்வர். ஒவ்வொரு மாணவரும் தமக்கு மிகப் பொருத்தமான வழிமுறையைத் தெரிவு செய்ய முடியும். இதற்கென பிரத்தியேகமான வகுப்புக்கள் அவசியமற்றவை.

முகாமைத்துவக் கற்கை கள் வணிகபீடம் ஒவ்வொரு மாணவரும் தமது கல்வியை பூரணமாக நிறைவு செய்வதற்கு தேவையான வசதிகளை அளிக்கும் என உத்தரவாதமளிக்கின்றது. இக் கற்கை நெறியை நடாத்தும் பொறுப்பினை முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம் ஏற்றுக்கொண்டுள்ளது. நிர்வாக ரீதியான விடயங்கள் வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் அலகினால் கையாளப்படும்.

### அனுமதிக்கான தகைமைகள்

விண்ணப்பதாரியொருவர் பல்கலைக்கழக அனுமதிக்கான ஆகக்குறைந்த தகைமை அல்லது பல்கலைக்கழக மூதவையால் ஏற்றுக்கொள்ளக்கூடிய சமமான தகைமையைப் பெற்றிருத்தல்வேண்டும். அதே நேரம் ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்தில் உள்வாரியாகவோ, அல்லது வெளிவாரியாகவோ பட்டதாரி மாணவராகப் பதிவு செய்தவராக இருத்தல் கூடாது.

விண்ணப்பதாரியொருவர் எழுத்துப் பரீட்சைமூலமும், நேர்முகப் பரீட்சை மூலமும் தெரிவு செய்யப்படுவர். எழுத்துப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு பொருத்தமான விண்ணப்பதாரி தெரிவுசெய்யப்படுவர். எழுத்துப் பரீட்சை முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தினால் நடாத்தப்படும்.

மாணவரின் விவேகம், ஆற்றல் என்பவற்றை மதிப்பிடும் பொருட்டு தமிழ்மொழி மூலம் இரண்டு மணித்தியாலங் களைக் கொண்ட பொது உளச்சார்புப் பரீட்சை நடாத்தப்படும். இது விண்ணப்பிக்கும் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்திலும், வவுனியா வளாகத்திலும் தேவைப்படின் கொழும்பிலும் நடாத்தப்படும். பரீட்சை விண்ணப்பம் கோரப் பட்டு 45 நாட்களிற்குள் தெரிவுப் பரீட்சை இடம் பெறும்.

### கற்கை நெறித்திட்டம்

தெரிவு செய்யப்படும் மாணவர்கள் தமது பதிவினை மேற்கொண்டதன் பின்னர் முதலில் அறிமுக நிகழ்வும் அதனைத்தொடர்ந்து கணனியில் பாடநெறிகளைக் கையாள்வது தொடர்பான மூடில் (Moodle System) பயிற்சிப் பட்டறையும் இடம்பெறும். கற்கைநெறி வருடாந்தம் இரண்டு அரையாண்டுகளைக் கொண்ட மூன்று ஆண்டுகளைக் கொண்டது. ஒவ்வொரு அரையாண்டும் ஐந்து பாடங்கள் வீதம் மொத்தம் 30 ,பாடங்களைக் கொண்டது.

முதல் இரண்டு ஆண்டுகளும் நான்கு அரையாண்டுகளுக்கும் ஆங்கிலம் ஒரு பாடமாகக் கொள்ளப்படும். எனினும் இது கிறெடிற் பெறுமதியற்ற பாடமாகும். ஏனைய பாடங்களில் முதலாம், இரண்டாம் ஆண்டுகளில் ஒரு பாடத்திற்கு நான்கு கிறெடிற் பெறுமதி வீதம் ஒரு அரையாண்டில் பதினாறு கிறெடிற் பெறுமதி அடிப்படையில் இரு ஆண்டுகளில் 64 கிறெடிற் பெறுமதியும், இறுதி ஆண்டில் மொத்தம் எட்டுப் பாடங்களிற்கும் 32 கிறெடிற் பெறுமதியுமாக 96 கிறெடிற் பெறுமதியைக் கொண்ட கற்கைநெறியாகும்.

கற்கை நெறி யின் ஒரு பாடமானது (Subject/ Course) 20 வாரங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கும். ஒவ் வொரு வாரத்திற்குமான அலககுகள் இணை யத்தில் Moodle System மூலமாக வெளியிடப்படும். இணையவசதியுள்ள மாணவர்கள் இணையத்தின் மூலம் இவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும். வாரா வாரம் மாணவர்கள் தமது கற்கைநெறியைத் தாமாகவே சுயமாகக் கற்கமுடியும். சந்தேகங்கள் ஏற்படின் குறிப்பிடப்பட்ட பாடநெறிகளுக்கான விரிவுரையாளர்களுடனோ அல்லது போதனா சிரியர்களுடனோ (Tutors/Mentors') தொலைபேசி வாயிலாகத் தொடர்புகொள்வதன் மூலமும், மின்னஞ்சல் வாயிலாகவும் மற் றும் Moodle System இல் அறிமுகப்படுத்தப்படும் செயற்பாடுகளின் மூலமும் தீர்த்துக் கொள்ளமுடியும்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வெளிவாரி அலகில் DEMP உதவித் திட்டத் துடன் ஆரம்பிக்கப்படவிருக்கும் மாணவர் நிலையத்தினூடாக காலப் போக்கில் மாணவர் கள் இவ் இணைய வசதியைப் பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் காணப்படலாம். யாழ்ப்பாணத்திற்கு வெளியே இருக்கும் பிற பிரதேச மாணவர்கள் அப்பகுதியில் செயற் படும் Multimedia Centre ஊடாக இவ் வசதியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

எனினும், ஆரம்பத்தில் எல்லா மாணவர்களின் நலனையும் கருத்திற்கொண்டு பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ வணிக பீட விரிவுரையாளர்களின் மூலம் விரிவுரைகளும் பாடக் குறிப்புக்களும் வழங்கப்படும். காலத்திற்குக் கா்லம் சுயமதிப்பீட்டு ஒப்படைகள் அல்லது பரீட்சைகள் இடம்பெறலாம்.

இவை மாணவர்களால் நேரடியாகவோ அல்லது குறிப்பிடப்படும் Moodle முறைமையினூடாகவோ அனுப்பி வைக்கப்படலாம். அவை திருத்தப்பட்டு அம் மாணவருக்கு பின்னூட்டிக் குறிப்புக்களுடன் அனுப்பி வைக்கப்படும். இதில்முக்கிய விடயம் யாதெனில் , குறிப்பிட்ட திகதிக்குள் இவை சமர்ப்பிக்கப் பட்டிருத்தல் வேண்டும்.

மொத்தப் புள்ளியில் இவற்றுக்கான புள்ளி 30 வீதமாகும். மிகுதி 70 வீதமான புள்ளியை மாணவர் அரை யாண்டு தோறும் இடம்பெறும் இறுதிப்பரீட்சை மூலம்பெற்றுக் கொள்வர். மாணவர்கள் ஓரளவு கணனி அறிவினைப் பெற்றிருத்தல் சிறந்தது. தெரிவுசெய்யப்படும் மாணவர்கள் அனைவரும் மின்னஞ்சல் முகவரியைப் பேணிக் கொள்ளவேண்டும் என எதிர்பார்க்கப்படுவர்.

இக் கற்கைநெறிக்கான காலம் மூன்று வருடங்கள் ஆகும். இதனை மாணவர்கள் ஆகக் குறைந்தது 7 வருடங்களுக்குள் பூர்த்தி செய்தல் வேண்டும்.

### பரீட்சைகள்

ஒவ்வொரு அரையாண்டு முடிவிலும் அனைத்துப் பாடநெறிகளுக்குமான பரீட்சை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி பரீட்சைகள் அலகினால் நடாத்தப்படும். பரீட்சை நோக்கின் பொருட்டு மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கோ அல்லது மாணவர் நிலையங்களாக அறிவிக்கப்படும் இடங்களுக்கோ வருகை தரவேண்டும். இது யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும், தேவைப்படின் கொழும்பிலும் நடைபெறலாம்.

இக்கற்கைநெறியை மாணவர்கள் பின்வரும் அடிப்படையில் பணத்தைச் செலுத்துவதன்மூலம் தொடரமுடியும். ஒவ்வொரு வருடமும் செலுத்தப்பட வேண்டிய பணம் அவ்வருட ஆரம்பத்திலேயே செலுத் தப்படல் வேண்டும். பணம் செலுத்தப்படாத பதிவுகள் அனைத்தும் ரத்துச் செய்யப்படும்.

### பதிவு செய்தல்

- மேற்குறிப்பிடப்பட்ட தகைமைகளைக் கொண்டிருக்கும் ஒரு பரீட்சார்த்தி குறிப்பிடப் பட்ட கற்கைநெறிக்கு பதிவு ெய்ய தகுதியுடையவராவார்.
- பதிவினை மேற்கொண்ட பின்னர் அவரால் சமர்ப்பிக்கப்பட்ட விபரங்கள் ஏதாவது பிழையானவை எனக் கண்டுபிடிக்கப் படுமிடத்து அவரது பதிவை இரத்துச் செய்யும் அதிகாரம் பல்கலைக்கழகத்திற்கு உண்டு. அவரால் செலுத்தப்பட்ட எந்தவொரு பணத் தொகையும் மீள வழங்கப்படமாட்டாது.
- விளம்பரத்தின் மூலமே பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படும்.
- பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சை அலகிலிருந்து பெறப் பட்டு முடிவுத் திகதியிலன்றோ அல்லது அதற்கு முன்னரோ பதிவுகளை மேற்கொள் ளல் வேண்டும்.

**ரதிராணி யோகேந்திரராஜா**
இணைப்பாளர்,
வியாபார முகாமைத்துவமாணி

விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் படிவங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்திலும் பெற்றுக் கொள்ளலாம். பத்திரிகையில் விண்ணப்பங்கள் கோரப்படும் போது இதற்கான இணைய முகவரி அறிவிக்கப்படும் மேலதிக விபரங்கள் விண்ணப்பம் கோரப்படும்போது அளிக்கப் படும்.

**இக் கற்கைநெறிக்கான கட்டணம் பின்வருமாறு அறவிடப்படும்**

| | முதலாம் வருடம் (சான்றிதழ்) ரூபா | இரண்டாம் வருடம் (டிப்ளோமா) ரூபா | மூன்றாம் வருடம் (பட்டப்படிப்பு) ரூபா |
|---|---|---|---|
| பதிவுக்கட்டணம் (புதுப்பித்தல் கட்டணம்) | 1,500 | 1,000 | 1,000 |
| கல்விக் கட்டணம் | 12,500 | 15,000 | 17,500 |
| தொழினுட்பக் கட்டணம் | 3,500 | 3,500 | 3,500 |
| பரீட்சைக் கட்டணம் | 2,000 | 2,500 | 2,500 |
| மொத்தம் (ஒரு வருடத்திற்கானது) | 19,500 | 22,000 | 24,500 |

# ஐயாயிரம் மாணவர்களுக்கு இலவச தொழிற்பயிற்சி

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் சகல பிரதேசங்களிலும் பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்துவிட்டு வெளியேறிய மாணவர்கள் பொருத்தமான தொழிற் பயிற்சிகளைப் பெறுவதற்கான புலமைப் பரிசில் திட்டமொன்றினை கல்வியமைச்சு ஆரம்பித்துள்ளது.

இதன்பிரகாரம், நாடளாவிய ரீதியில் சுமார் 5ஆயிரம் மாணவர்கள் இலவசமாக தொழிற்பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வதற்கான புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் அமுல்படுத்தப்பட்டு வரும் இடை நிலைக் கல்வியை நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் ''சிசுதிரிய'' மாணவர் ஊக்குவிப்பு எனப்படும் இவ் விசேட புலமைப்பரிசில் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படும் பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்த மாணவர்கள் தொழிற் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வதற்கான முழுச் செலவுகளையும் கல்வியமைச்சு பொறுப்பேற்கவுள்ளது.

இந்தத் தொழிற்பயிற்சி புலமைப்பரிசில் திட்டத்திற்கு தகுதியான மாணவர்களை இணைத்துக்கொள்ளும் நடவடிக்கைகள் வலயக் கல்வி அலுவலகங்கள் மூலமாக தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது. (ஓ-6)

# யுத்தத்தில் பெற்ற வெற்றிகள் பிரச்சினைகளின் தீர்வாக அமையாது

## முன்னாள் ஐ.நா.பொதுச்செயலர் கோபி அனான்

(கொழும்பு)

மோதல்களால் இடம்பெயர்ந்தவர்களை துரிதமாக குடியமர்த்துவதன் மூலம் 22 வருட கால யுத்தத்தால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புகளை சரிப்படுத்துமாறு ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் பொதுச் செயலர் கோபி அனான் இலங்கை அரசாங்கத்தை கோரியுள்ளார்.

வெளிநாட்டு ஊடகம்ஒன்றுக்கு கோபி அனான் நேற்று முன்தினம் வழங்கிய பிரத்தியேக செவ்வி ஒன்றிலேயே இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

மேலும் யுத்தத்தின் வெற்றிகள் பிரச்சினைகளின் தீர்வாக அமையாது என்பதை அரசாங்கம் முதலில் புரிந்துகொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட் டுள்ளார்.



பாதிக்கப்பட்டுள்ளவர்களின் இழப்புகளை ஈடுசெய்வதன் ஊடாகவும் அவர்களை துரிதமாக மீளக் குடியமர்த்தி சமாதானமான வாழ்வினை உறுதி செய்வ தன் ஊடாகவுமே அதனை அடைய முடியும் என அவர் தெரிவித்துள்ளார். அவ்வாறு அரசாங்கம் மேற்கொள்ளத் தவறினால் எஞ்சியுள்ள பிரச்சினைகள் எதிர்காலத்தில் பாரிய நெருக்கடிகளை தோற்றுவிக்கும் என எச்சரித்துள்ளார். (ஓ-6)

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

8-IV

### தொடரான பயிர்ச் செய்கை (Relay Cropping)

பெயரைக் கேட்டவுடனேயே விளையாட்டுப் போட்டிகளில் பயன்படுத்தப்படும் தடி கொண்டு ஓடும் Relay ஓட்டம் ஞாபகத்திற்கு வருகின்றதல்லவா! அதே செயன்முறையை ஒத்ததாகவே தொடரான பயிர்ச்செய்கை அமைகின்றது.

ரிலே Relay ஓட்டத்தில் ஒருவர் ஓடும்போது ஓடி சுற்றிவந்து இன்னொருவரிடம் ஓடிக் கொண்டே தடியை கொடுப்பார். வாங்கியவர் தொடர்ந்து ஓடுவார். அது போலவே முதன்மைப் பயிர் அறுவடை செய்யுமுன்பு தொடராக பயிர் செய்யப்படும் இணைப் பயிர் (Companion crop) விதைக்கப்படும்.

முதன்மைப் பயிருக்கு செய்யப்படும் பயிர் செய்கைகள் எதுவும் இணைப்பயிருக்கு செய்வதில்லை. விதைப்பதையும் அறுவடை செய்வதனையும் தவிர உதாரணமொன்றினை கூறின் இலகுவாக விளங்கிவிடும்.

முதன்மைப் பயிராக யாழ்ப்பாணத்திலே காலபோகத்தில் நெற்பயிர் பயிரிடப்பட்டு அதன் அறுவடை வழக்கமாக தைப்பொங்கலுடன் அண்மித்து இருக்கும். மூன்று மூன்றரை மாதப் பயிராயின் முதல் வருட செப்டெம்பர் இறுதியில் அல்லது ஒக்டோபரில் விதைத்த நெல் அடுத்த வருட தைத்திருநாளில் அறுவடையாகி புதிய நெல்லில் அமுது வைக்கும் வழக்கம் ஆண்டாண்டு காலமாக நடைமுறையிலிருந்து வருகின்றது.

நெல் அறுவடையின் பின்னர் வயல் வெறுமனே இருக்கும். அதுவும் யாழ்ப்பாணத்தில் அடியொட்டி வெட்டப்படும் வைக்கோலும் வன்னி நிலப்பரப்பில் மேலெழுந்த வாரியாக கதிர் கொய்யும் செயல்முறையும் வழக்கமாகும்.

இவ்விரண்டிலும் மீதியாயுள்ள வைக்கோல் அல்லது நெற்பயிர் மீதிகளில் (Stubbles) பூச்சி பீடை பல்கிப் பெருக வாய்ப்பு கிடைத்துவிடும். இதனைத் தவிர்க்க தொடரான பயிர்ச் செய்கை உட்புகுத்தப்பட்டிருக்கிறது.

கிடைக்கும் மண்ணிலுள்ள மீதியான ஈரப்பதனுடன் எதுவுமே இடாது இன்னொரு பயிர் விதைத்து அறுவடை செய்யும் விந்தை பாரீர். இங்கே இன்னொரு பயிர் என குறிப்பிட்டது அவரையின் பயிர்களையே. உழுந்து, பயறு போன்றவற்றை நெல் அறுவடைக்கு முன்னரேயே விசிறி நெல் அறுவடை செய்யும் போது கால்களால் உழக்கும் போது அவ்விதைகள் மண்ணுள் புதைந்து, முளைத்து இன்னொரு




பயிரைத் தந்து விடும். நெல் - அவரை கூட்டு சிறந்ததொரு உதாரணமாகும்.

இங்கே இணைப்பயிரான அவரைப்பயிர் புரதச்சத்து நிறைந்ததாகவும் மண்ணில் தழைச்சத்தை நிலைநாட்டும் திறனுடையதாகவும் இருப்பதனால் மண்ணுக்கும் நல்லது. நாமும் செலவின்றி (விதையின் செலவு தவிர) சிறந்ததொரு அவரையினத்தைப் பெற்றதாகின்றோம்.

ஊட்டச்சத்து குறைந்த பிள்ளைகளிருக்கும் இப்பூமியில் இவ்வாறான செயற்பாடு விலை குறைந்த நிலையில் உழுந்து, பயறு என்பன கிடைக்க வழிகிடைக்கும். அதே நேரத்தில் மண்ணின் வளம் அதிகரிக்கவும், அதிலே வளரவிருந்த தேவையற்ற களைகளை கட்டுப்படுத்த கூடியதாகவும் உள்ளதல்லவா!

இதே போன்ற பயிர்ச் செய்கையினால் மண்ணில் இருக்கின்ற மிச்ச சொச்ச ஈரப்பதனை முழுமையாக இன்னொரு பயிரை உருவாக்க முடியும் போது பயிர்ச் செய்கைக்கு செலவிடும் பணத்தைச் சேமித்து இலாபம் பெறக்கூடியதாக இருப்பதுடன் அவரைப் பயிர் உற்பத்தியை மேம்படுத்தக் கூடியதாகவும் இருக்கும். இதன் மூலம் இவ்வாறான பயிருணவுகள் தயாரிப்பிற்கும் உதவ முடியும்.

குறிப்பாக உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கவும் முடியும். நமது பயிருற்பத்தியை ஊக்குவித்து மலிவான விலையில் சிறந்த உள்ளூர் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து 50 ஆண்டுகளை பூர்த்தி செய்துள்ள 'அண்ணா' நிறுவனத்தின் பங்கு அளப்பரியது. இது நம்மவர்களால் நமக்கென்றே உருவாகி ஆலமரம் போல கொழும்பிலும் வவுனியாவிலும் விழுதுகள் பரப்பி நம்மவர் நிறுவனமாக உயர்ந்து நிற்கின்றது.

இன்னொரு பசுமைப் புரட்சியில் இவர்களது நிறுவனங்கள் போல பல உருப்பெற்று உணவில், உற்பத்தியில் அவற்றுடனிணைந்த கைத்தொழில் புரட்சி செய்திடல் வேண்டும்.

மேலே குறிப்பிட்ட தொடரான பயிர்ச் செய்கையில் கால போகத்தில் பயிரிடும் நெற்பயிருக்கு பின்னர் வல்லாரை, பொன்னாங்காணி போன்ற இலைக்கறிப் பயிர்களையும் உற்பத்தி செய்யலாம்.

அளவான ஈரப்பதன் உள்ள வயலில் இம்மாதிரியான இலை வகை பயிர்களையும், இன்னம் மூலிகைகளையும் வளர்க்கலாம். வெறுமனே நெல் அறுடைக்குப் பின்பு அந்நிலத்தை அப்படியே விடாது இருவித்திலைப் பயிரொன்றை தெரிந்தெடுத்து பயிர் செய்வது சாலச் சிறந்தது. இம்மாதிரியான பயிர்ச் செய்கைக்கு அவரைப் பயிர்கள் சிறந்தன.

இவற்றை விட சணல் பயிரிடலாம். தேவையேற்படின் 50% பூத்திருக்கையில் மடக்கி உழுது விடலாம். இன்னும் அதனை வளரவிட்டு அதன் தண்டிலிரு ந்து சணல் நாரைப் பிரித்தெடுக்கலாம். சேதன வழி பயிர்ச்செய்கையில் இவ்வகை நாருக்கு என்றுமே மவுசு உண்டு.

### களைகள் - சுதேச மருத்துவத்தில் மூலிகைகள்

வேளாண் செய்கையில் களைகள் என இனங்காணப்படும் தாவரங்கள் சுதேச மருத்துவத்தில் மூலிகைகளாக பயன்படுத்தப்படும் விந்தை பாரீர்.

பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்தப்படும் தாவரங்களுடன் சரிக்கு சரியாக போட்டியிடும் களைகளை இயன்றளவிற்கு கட்டுப்படுத்துவதற்காக எங்களூர் விவசாயிகள் முயன்று மூச்சிழுத்துக் கொண்டிருக்கும் நிலையில் இவ்வகை தாவரங்களை மூலிகைகளாக சுதேச வைத்தியத் தில் பயன் படுத்துவ தையும் தூய்மையான மூலிகைகளை வைத்தியர்கள் தேடியலைவதையும் தற்போது காணக்கூடியதாக இருக்கின்றது.



இங்கே விவசாயத்

**கலாநிதி கு.மிகுந்தன்**
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

திற்கும் சுதேச மருத்துவத்திற்குமான புரிந்துணர்வு அல்லது சரியான வழிகாட்டலுடனான அதியுச்ச பயன்பாடு இன்மையையே அவதானிக்கக் கூடியதாயுள்ளது.

### அறுகும் கோரையும்

வேளாண் செய்கையில் பொதுவான பிரச்சினையாக எழுந்துள்ள ஒருவித்திலை களைகளான அறுகு, கோரை என்பன மிகுந்த மருத்துவ குணமுள்ளவையாக இருப்பதை "வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை" கட்டுரைத் தொடரிலிருந்து அறிந்திருப்பீர்கள்.

மேட்டுநிலப் பயிர்ச் செய்கையில் அறுகம் புல்லினது ஆதிக்கம் அதிகமிருப்பினும் அதனால் ஏற்படுத்தப்படும் தாக்கம் ஏனைய களைகளுடன் ஒப்பிடும் போது குறைவாகவே இருக்கின்றது. அறுகம்புல் களையாக இருப்பினும், தமிழ் நாட்டில் இதனைப் பயிராக வளர்க்கின்றார்கள்.

குறிப்பிட்ட விளை நிலங்களில் 'அறுகம் புல்' பயிர்ச் செய்கை சேதன முறையில் செய்யப்பட்டு, 'அறுகம்புல்' சுத்தமான முறையிலே வெட்டியெடுக்கப்பட்டு கழுவி 'அறுகம்புல்' சாறு (Juice) தயாரித்து காலையில் வெறும் வயிற்றில் பானமாக அருந்தும் பழக்கம் அதிகரித்து வருகின்றது. (தொடரும்)

---

# ஐ.நா. மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பான விசேட பிரேரணையை தோற்கடிப்போம்

## அமைச்சர் மஹிந்த சமரசிங்க கூறுகிறார்



(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையில் நாளை மறுநாள் இலங்கை தொடர்பான விசேட பிரேரணை ஒன்று கொண்டு வரப்படவுள்ளது. ஏனைய உறுப்பு நாடுகளின் ஆதரவுடன் அந்த பிரேரணையை தோற்கடிப்பதற்காக நான் ஜெனிவா செல்லவுள்ளேன் என்று இடர் முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையில் அங்கம் வகிக்கும் 48 நாடுகளில் 17 நாடுகள் குறித்த பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்துள்ளன. இந்த பிரேரணையை இலங்கை அரசாங்கம் தோற்கடித்தே தீரும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையில் பிரேரணை கொண்டு வரப்படவுள்ளமை குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அமைச்சர் மேலும் கூறியதாவது,

ஜெனிவாவில் இடம்பெறவுள்ள இந்த அமர்வில் கலந்துகொண்டு அதனை தோற்கடிப்பதற்காக நான் அங்கு செல்லவுள்ளேன். மனித உரிமை பேரவையில் எமக்கு ஆதரவான நாடுகள் உள்ளன. அந்த நாடுகளின் ஆதரவுடன் பிரேரணையை தோற்கடிப்போம். பிரேரணை குறித்து எந்த கருத்தையும் அமர்வின் போது வெளியிடமாட்டோம்.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களின் மாநாடு பிரஸல்ஸில் அண்மையில் நடைபெற்றது. அதன்போது இலங்கை தொடர்பிலான பிரேரணை ஒன்று கொண்டுவரப்பட வேண்டும் என்று தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் அரசாங்க சமாதான செயலகத்தின் பணிப்பாளரும் மனித உரிமைகள் அமைச்சின் செயலாளருமான பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க கருத்து வெளியிடுகையில்,

நாளை மறுநாள் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவையில் இடம்பெறவுள்ள இலங்கை குறித்த விசேட அமர்வில் அமைச்சர் மஹிந்த சமரசிங்கவுடன் நானும் கலந்து கொள்ளவுள்ளேன். அதற்கான ஆயத்தங்களை தற்போது மேற்கொண்டு வருகின்றோம்.

மனித உரிமை பேரவையில் அங்கம் வகிக்கின்ற 48 நாடுகளில் 17 நாடுகள் இலங்கை தொடர்பான அமர்வுக்கு ஆதரவளித்துள்ளன. எமக்கு ஆதரவாக செயற்படுவதாக வாக்குறிதியளித்த சில நாடுகளும் இறுதி நேரத்தில் பிரேரணைக்கு ஆதரவளித்துள்ளன.

எனவே பிரேரணையை தோற்கடிக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நாங்கள் மேற்கொள்வோம். தற்போது எதனை வலியுறுத்தி பிரேரணை கொண்டு வரப்போகிறார்கள் என்று தெரியவில்லை. சிலவேளை அரசியல் தீர்வை முன்வைப்பது தொடர்பில் கலந்துரையாடப்படலாம்.

அரசியல் தீர்வை முன்வைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது. இந்நிலையில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணைக்குழுவில் அது வலியுறுத்தப்படவேண்டிய அவசியம் இல்லை. அந்த விடயத்தை முன்வைத்தால் ஏன் எங்களை பணத்தை செலவழித்து வர வழைத்தீர்கள்? என்று அமர்வின் போது கேள்வியெழுப்பத் திட்டமிட்டுள்ளோம் என்றார். (ஓ-6)

---

# தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு ஒரு மாத காலத்தில் தீர்வுத் திட்டம்

## அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்க அரசியல் தீர்வொன்றை மிக விரைவில் வழங்க வேண்டும். இதன் மூலமே நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என்று அமைச்சரும் சர்வகட்சிக் குழுக்களின் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

அரசியல் தீர்வுத் திட்டம் தொடர்பாக நேற்று முன்தினம் தெளிவுபடுத்துகையிலேயே பேராசிரியர் திஸ்ஸ விதாரண மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில், நீண்டகால யுத்தம் முடிவடைந்துள்ளது. மோதலுக்குக் காரணமாக காணப்பட்ட பிரச்சினைகளுக்கு அரசியல் ரீதியில் தீர்வுகள் காணப்பட வேண்டும்.

பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசியல் தீர் வொன்றை ஏற்படுத்துவதுடன், அதனை ஆதரவளிக்குமாறு சகல தரப்பினருக்கும் பகிரங்க அழைப்பை விடுத்தார்.

உண்மையில் பாதிக்கப்பட்ட மக்களின் நலன்கருதியும் நாட்டின் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தவும் ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல் தீர்வைக் காண்பதும் இக்காலத் தேவையும் உகந்த நடவடிக்கையுமாகும்.



சர்வ கட்சிக் குழுவின் தீர்வுத் திட்டம் தற்போது பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஆராயப்பட்டு வருகின்றது.

சுமார் ஒரு மாத காலப்பகுதிக்குள் ஏதோ ஒரு வகையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுத் திட்டம் முன் வைக்கப்படும் என்றார். (ஓ-6)

---

# ஆதனவரி மதிப்பீடு

(கோண்டாவில்)

நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் உப அலுவலகத்தினரால் கொக்குவில் நான்காம் வட்டாரத்தில் வரி மதிப்பீட்டு திட்டத்தின் முதற்கட்டமாக ஆதனவரி மற்றும் குடியிருப்பாளர் விபரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

இவ் ஆவணப் பதிவு நடவடிக்கைக்கு பூரண ஒத்துழைப்பு நல்குமாறு நல்லூர் பிரதேச சபை செயலாளர் எம். ஜே. சாந்தசீலன் கேட்டுள்ளார். (ஓ-36)

# புத்தாண்டில் உங்கள் வைகாசி மாதப் பலன்கள்

## தனுசு

**(மூலம், பூராடம், உத்ராடம் , 1ஆம் பாதம் வரை)**

**வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் தனுசு ராசி நேயர் களே!**

வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ராசிநாதன் குரு சகாய ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும் விதத்திலும் தொல்லைகள் அகன்றோடும் விதத்திலும் கிரக நிலைகள் சாதகமாகச் சஞ் சரிக்கின்றன. பொதுவாகக் கடந்த இரண்டு மாதங்களாக நீங்கள் பாடுபட்டதற்கு ஏற்ற பலன் இப்பொழுது கிடைக்கும்.

உச்ச சுக்ரன் விரயாதிபதி செவ்வாயுடன் கூடியிருப்பதால் மறைமுக எதிர்ப்புகளைத் தடுக்க இயலாது. இருப்பினும் எதிரிகளை வெல்லுகின்ற ஆற்றல் உங்கள் ராசிக்கு உண்டு சனியும் வக்ர நிவர்த்தியாகிவிட்டதால் பொருளாதாரப் பிரச்சினைகள் அகலும்.புதிய திருப்பங்கள் ஏற்படும். அருளாளர்கள் மற் றும் ஆன்மிகவாதிகளின் ஆலோசனைகள் உங்களுக்கு கைகொடுக்கும்.

அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் கேது அலைச் சலைக் கூட்டினாலும் ஆதாயத்தைக் கொடுக் கும். வாக்கு ஸ்தானத்தில் சந்திரனும், ராகுவும் இணைந்து சஞ்சரித்து மாதம் தொடங்குவதால் கொடுத்த வாக்கைக் காப் பாற்றுவீர்கள். கூட இருப்பவர்களால் நன்மை கிட்டும். கடிதம் மூலம் வரும் தகவல் காரிய வெற்றிக்கு உறுதுணையாக இருக்கும். வியாழன் தோறும் தெட்சிணாமூர்த்தி வழி பாட்டை முறையாக மேற்கொண்டால் ஆரோக்கியத்தைப் பற்றியும் கவலைப்பட வேண்டாம். அடுத்தடுத்தும் செய்யும் காரியங் களில் வெற்றி கிடைக்குமா என்றும் யோசிக்க வேண்டாம்.

மே 22ஆம் திகதி மேட ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். புத்திர ஸ்தானாதிபதி செவ்வாய், புத்திர ஸ்தானத்தில் புதனுடன் கூடிச் சஞ்சரிப்பதால் பிள்ளைகள் வழியில் நல்ல காரியங்கள் நடைபெறுவதற்கான அறி குறிகள் தோன்றும். மாமன் மைத்துனர் வழி ஒத்துழைப்புக் கிட்டும்,உத்தியோக மாற்றம் உறுதியாகும்.

மே 30 ஆம் திகதி மேட ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். அங்குள்ள புதனுடன் அவர் இணைந்து சஞ்சரிக்கும் பொழுது பிள்ளைகள் வழியில் உதிரி வருமானங்கள் பெருகும். ஆடை, ஆபரண சேர்க்கை அதிக ரிக்கும். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற் சிகளில் இதுவரை கிடைக்காத ஆதா யம் இப்பொழுது கிடைக்கத் தொடங்கும். பொது வாழ்வில் புகழ்கூடும். புதிய பொறுப் புகள் வந்து சேரும்.

7,10 க்கு அதிபதியான புதன் ஜுன் மாதம் 5ஆம் திகதி ரிஷப ராசியில் சூரியனுடன் கூடிச் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக தந்தை வழியில் இருந்த பிரச்சினைகள் அகலும். பூர்வீக சொத்துக்களால் எதிர்பார்த்த நற்பலன் கிட்டும். வாகனம் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். தூர தேசத்திலிருந்து வரும் தொலைபேசி வழித் தகவல்கள் தொழி லுக்கு உறுதுணையாக இருக்கும். புதிய பொறுப்புகளும்,பதவிகளும் ஒரு சிலருக்கு வந்து சேரலாம்.

இம்மாதம் அதிசாரமாக கும்பத்திற்கு செல்லும் குருவின் பார்வை பலத்தால் 7,9,11 ஆகிய இடங்கள் புனிதமடைகின்றன. எனவே திருமண முயற்சிகள் வெற்றி தரும். திடீர் திருப்பங்கள் உருவாகும் .வருமானம் எதிர் பார்த்தைப் போல் இரு மடங்காகும். வழக்கு களில் வெற்றி கிட்டும்.

நல்ல காரியம் இல்லத்தில் நடைபெற நடராஜப் பெருமான் வழிபாட்டில் நம்பிக்கை வையுங்கள். நலம் தரும் குருவையும் வழிபட்டு இனிய வாழ்க்கையை அமைத்து கொள்ளுங் கள்.

## மகரம்

**(உத்ராடம் 2, 3,4பாதங்கள் ,திரு வோணம்,அவிட்டம் 1,2 பாதம் வரை**

**சாமர்த்தியமாகப் பேசி சமாளிக்கும் ஆற்றலைப் பெற்ற மகரராசி நேயர்களே!**

வைகாசி மாத கிரக நிலைகளை ஆராய் ந்து பார்க்கும் பொழுது ஜென்ம குரு உங்க ளுக்கு விலகி செயல்பாடுகளில் ஓரளவு நன்மைகளைச் செய்யத் தொடங்கும் சூழ் நிலை உருவாகிறது. உடல் நலக்குறைவும் , உள்ளத்தில் அமைதி குறைவையும் இதுவரை சந்தித்து வந்த நீங்கள் இனி படிப்படியான முன்னேற்றத்தைக் காணப்போகிறீர்கள்.

அதிசாரமாக செல்லும் குரு எதிர்பார்த்த அளவிற்கு நற்பலன்களைக் கொடுக்காது என்றாலும் , அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் ராசிநாதன் சனியைப் பார்ப்பதால் தடைகள் அகலும். தனவிரயத்தை சமாளிப்பீர்கள் இடை, இடையே ஏற்பட்ட குடும்ப பிரச்சி னைக்கு என்ன செய்வது என்று தெரியாமல் இருந்த உங்களுக்கு புதிய நபர்களின் சந்திப்பும்,அதன் மூலம் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ளும் வாய்ப்பும் உருவாகும்.

மாதத் தொடக்கத்திலேயே பஞ்சமாதிபதி உச்சம் பெற்று, சுகலாபாதிபதி அதனுடன் இணைந்திருப்பதால் பொருளாதார பற்றாக் குறை ஏற்படாது தொழில் ரீதியாக பங்குதாரர் களின் ஒத்துழைப்பு குறையலாம். இருப்பி னும், புதிய பங்குதாரர்கள் வந்திணைவர். விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

மே 22ஆம் திகதி மேட ராசியில் செவ் வாய் சஞ்சரிக்கப்போகிறார். சுகாதிபதி சுகஸ் தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் சுகங்களும்,சந்தோஷங்களும் அதிகரிக்கும். நீடித்த நோயிலிருந்து நிவாரணம் பெறு வீர்கள். மாற்று வைத்தியம் பார்ப்பதன் மூலம் உங்கள் மனக்குறைகள் அகலும். வீட்டு பிரச்சினைகள் ஒவ்வொன்றாக நல்ல முடி வுக்கு வரும் .பணத் தேவைகள் பூர்த்தியாகும்.

மே 30ஆம் திகதி மேட ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். 5,10க்கு அதிபதியான சுக்ரன் 6க்கு அதிபதி புதனுடன் இணையும் இந்த நேரத்தில் தொழிலுக்காக புதிய கடன்களை வாங்கும் சூழ்நிலை உருவாக லாம். ஒரு சிலருக்கு வியாபாரத்தில் போட்டி கள் அதிகரிக்கும் .அருகில் இருப்பவர்களை அனுசரித்து செல்வதன் மூலம் ஆதாயத்தை அடையலாம்.

ஆறுக்கு அதிபதி புதன்,எட்டுக்கு அதிபதி சூரியனுடன் ஜுன் 5ஆம் திகதி முதல் இணைந்து சஞ்சரிக்கப்போகிறார். இதனால் நற்பலன்கள் ஏற்படும். என்றாலும் ஒன்ப துக்கு அதிபதியாகவும் புதன் விளங்குவதால் தந்தை வழியில் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நல்ல முடிபுக்கு வரும் சொத்து தகராறுகள் உருவாகலாம். வாகன பழுதுச் செலவுகள் அதிகரிக்கும்.

**கலாமணி சிவல்புரி சிங்காரம்**

இம் மாதம் கும்பத்தில் அதிசாரமாக செல்லும் குரு 6,8,10 ஆகிய இடங்களை பார்ப்பதால் ,கடன் சுமை குறையும் உடல் ஆரோக்கியம் சீராகும்.

குருவின் வக்ர காலத்தில் வழிபாடு களை மேற்கொண்டால் வளர்ச்சி பாதிக் காது.

(தொடரும்)

# வன்னி மக்களை தொடர்ந்தும் முகாம்களில் தங்க வைத்திருப்பது உசிதமானதல்ல

## ஜயலத் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

வன்னி மக்கள் முகவரியற்றவர்களாக ஆகிவிடக்கூடாது என்பதில் ஐக்கிய தேசியக் கட்சி கரிசனை கொண்டுள்ளது. அகதி முகாம் களே அந்த மக்களின் நிரந்தர வாழ்விடங் களாக மாற்றிவிடாது.அவர்களின் மீள்குடி யேற்றத்தை உறுதிப்படுத்துமாறு அரசாங்கத் தைக் கோருகின்றோம் என்று அக்கட்சியின் மனித உரிமைகளுக்கான பிரதிச் செயலாள ரும் கம்பஹா மாவட்ட எம்.பி.யுமான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில் இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள அப்பாவிப் பொதுமக்களின் பால் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் கேட்ட போதே ஜயலத் ஜயவர்த்தன எம்.பி. இதனைத் தெரிவித்தார்.

அவர்மேலும் கூறுகையில்,

"வன்னித் தமிழர்கள் எமது நாட்டின் ஒரு சமூகத்தினர் மட்டுமல்லாதுஅவர்கள் இந் நாட்டின் குடிமக்கள் ஆவர்.அவர்களை இரண் டாம் தர மக்களாக கருதுவதற்கு எவருக்கும் உரிமையில்லை.

யுத்த காரணத்தால் வன்னியில் தவித்த மக்கள் இன்று நலன்புரி நிலையங்கள் என்ற பெயரில் அகதிகளாக முகாம்களில் பல்வேறு இன்னல்களுக்கும் துயரங்களுக்கும் முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

அந்த மக்களின் அடிப்படைத் தேவைகள் சீரான முறையில் நிறைவேற்றப்படுவதில் குறைபாடுகள் நிலவுகின்றன. ஒரு நாட்டுக் குள் ஒரு சமூகம் இவ்வாறு துன்பப்படுவது வேதனைக்குரிய விடயம் ஆகும்.

பயங்கரவாதத்திடம் இருந்து மீட்கப்பட்ட நாட்டில் வடக்கு தமிழ் மக்கள் எனது சகோத ரர்கள் என்றும் அவர்களது உரிமைக்கு உரிய மதிப்பளிக்கப்படும் என்றும் கூறுகின்ற கூற் றுக்களை நடைமுறையில் செயற்படுத்திக் காட்ட வேண்டும்.

தற்போது அகதிகளாக முகாம்களில் வாழ்ந்துகொண்டிருக்கும் மக்களை அவர் களது சொந்த இடங்களில் மீள்குடியேற் றுவதற்கு தாமதிக்காது அரசாங்கம் நடவடிக் கைகளை மேற்கொள்ள வேண்டும். அவர் களைத் தொடர்ந்தும் நிரந்தரமாக முகாம்களி லேயே தங்க வைத்திருப்பது உசிதமானதல்ல.

அத்துடன் வன்னித் தமிழர்கள் முகவரி யற்றவர்களாக மாறிவிடக் கூடாது என்பதில் நாம் மிகுந்த கரிசனை கொண்டுள்ளோம்.

மேலும் அவர்களின் தற்போதைய அவசரத் தேவைகளான உணவு, மருந்து உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளில் குறை வில்லாது பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு எம் ஒவ்வொருவரிடம் இருக்கின் றது.

பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டு விட்டது. இதுவரை காலம் எதிர்க்கட்சியின ருக்கு இடம்பெயர்ந்த மக்களை பார்வை யிடுவதற்கு அரசாங்கம் மறுத்து வந்தது. ஆனால் மீண்டும் அதனைக் கூறுவதற்கு இட மில்லை.

எனவே அங்கு அவலப்பட்டுக் கொண் டிருக்கும் மக்களை சந்திப்பதற்கும் அவர் களின் சுக துக்கங்களில் பங்கு கொள்வதற்கும் எமக்கு அனு மதியளிக்கப் பட வேண்டும்.



யுத்த வெற் றிகளை எதிர்க் கட்சிகளின் மீதும் எமது தலைவர் ரணில் விக்கிர மசிங்கவின் மீதும் சேறு பூசிக் கொண்டி ருப்பதற்குப் பயன்படுத்துவதை விடுத்து, இதுவரை காலம் எதிர்பார்ப்புகளுடன் இருந்த தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசி யல் தீர்வினையும் அவர்களது உரிமை யையும் உறுதிப்படுத்துவதே மேலாகும் என்றார். (ஓ-6)

# தொழில் வழுங்குநருக்கான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் நடத்தப்படும் தொழில் வழுங்குநருக்கான கருத்தரங்கு எதிர்வரும் 28 ஆம் திகதி முற்பகல் 9.30 மணிக்கு திரும றைக் கலாமன்றக் கலைத்தூது கலையக மண்டபத்தில் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் மாவட்ட முகாமை யாளர் கி.கிருஷ்ணபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் கே.கணேஷ் கலந்து சிறப்பிப் பதுடன் சிறப்பு விருந்தினர்களாக யாழ். தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் கலாநிதி ந.யோகராஜன், யாழ்.உயர் தொழில்நுட்பக் கல்லூரி பணிப்பாளர் கெ.கதிரமலை, யாழ். மாவட்ட செயலக திட்மிடல் பணிப்பாளர் திருமதி இ.மோகனேஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ-4)

# இடம்பெயர்ந்த மாணவர்களின் கல்வியை மேம்படுத்த நடவடிக்கை

## பிரதிக் கல்வி அமைச்சர் சச்சிதானந்தன்

(கொழும்பு)

வன்னியில் இடம்பெயர்ந்த மாணவர் களின் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத் தும் வகையில் பல்வேறு கல்விசார்ந்த செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாக பிரதிக் கல்வி அமைச்சர் எம். சச்சிதானந்தன் தெரிவித்தார்.

யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டு அகதி முகாம்களில் வாழும் வன்னி மாணவர்களின் நலன்காப்பு விடயங்களை உடனடியாக ஏற்படுத்தும் வகையில் கல்வி அமைச்சின் செயலாளர் நிமல் பண்டாரவுக்குப் பணிப் புரை வழங்கியுள்ள அதேவேளை, கல்வி அமைச்சின் செயலாளர் அடங்கலான குழு வொன்றும் வ்ன்னிக்குச் செல்லவுள்ளது.

இதுதவிர பாடசாலைகளில் கல்வி கற் பிக்கும் ஆசிரியர்களின் நலன்காப்பு விடயங் களை முன்னெடுத்துச் செல்வதற்கான திட்டங்களையும் செயற்படுத்தவுள்ளேன். மேலும் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு பாடப் புத்தகங்கள் மற்றும் பாடசாலை உபகரணங் கள் பலவும் அனுப்பி வைக்க ஏற்பாடாகியுள் ளது என்று பிரதிக் கல்வி அமைச்சர் எம்.சச்சி தானந்தன் மேலும் தெரிவித்தார். (ஓ-6)

எவன் பொதுமக்களின் கைத்தட்டலுக்காக தன் கொள்கைகளை மாற்றிக் கொள்ளாமல் இருக்கிறானோ அவனே சிறந்த மனிதன்.

– ரிச்சர்ட் ஸ்டீல்

வலம்புரி

## எம்.ஜி.ஆரின் படத்தில் வரும் நம்பியாரா இவரும்

நம்பியார் என்றாலே வில்லன் பாத்திரமே தமிழர்களுக்கு ஞாபகத்திற்கு வருவது.

மக்கள் திலகம் எம்.ஜி.இராமச்சந்திரன் நடித்த படங்களில் எல்லாம் வில்லனாகக் காட்சி கொடுத்தமையால் 'நம்பியார்' என்றால் வில்லன் என்ற பொருள்படுமளவிற்கு நிலைமை மாறிவிட்டது.

அந்த நம்பியார் இன்று உயிரோடு இல்லை. தனிப்பட்ட நம்பியார் நல்லவராக இருந்தாலும் திரைப்பட உலகம் தமிழ் மக்களின் மனங்களில் நம்பியார் பற்றி பதித்த எண்ணக்கரு வில்லன் என்பதே.

அது சரி, இறந்துபோன நம்பியாரை எதற்காக தூக்கிப் பிடிக்கிறீர்கள் என்றால் அதற்கும் காரணம் உண்டு.

இலங்கைப் பிரச்சினை தொடர்பில் ஆராய்வதற்காக ஐ.நா. செயலாளர் பான் கீ மூனின் பிரதிநிதியாக இங்கு வந்தவர் விஜய் நம்பியார்.

வன்னியில் யுத்தம் உக்கிரமடைந்த வேளையில் இலங்கைக்கு வந்த விஜய் நம்பியார் இலங்கை விஜயம் குறித்தும் அங்குள்ள நிலைவரம் குறித்தும் எதுவும் பேசாமல் மறைத்துவிட்டார்.

அவரின் இந்தச் செயல் ஈழத்தமிழர்களுக்கு அவர் மீது அவநம்பிக்கையை ஏற்படுத்தியது.

நம்பியார் என்று பெயர் இருந்தாலே அவர் வில்லனாகத்தான் இருப்பார் என்று தமிழ் மக்கள் கருதும் அளவுக்கு நிலைமை உருவாகியது.

ஐ.நா. சபை உலக அமைதிக்கான அமைப்பு. அந்த அமைப்பிற்கு உரிய மதிப்புக் கொடுக்க வேண்டும் என்ற கருத்துக்கள் ஈழத்தமிழரைப் பொறுத்தவரை வெறுப்புக்குரியவை.

எங்களைக் காப்பாற்ற ஐ.நா. சபை என்ன செய்தது என்ற கேள்வி ஈழத்தமிழரிடம் அழியா நினைவாக இருக்கப் போவது உறுதி.

இந்த நிலையில் ஏற்கனவே இலங்கைக்கு வந்துபோன ஐ.நா. பிரதிநிதி விஜய் நம்பியார் இப்போதும் இங்கு வந்து வவுனியாவில் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களை உலங்கு வானூர்தியில் இருந்தவாறு பார்வையிட்டுள்ளார்.

அவர் எதனைப் பார்த்தார். ஏன்? நேரில் சென்று பார்வையிடவில்லை. ஐ.நாவுக்கு திரும்பிய பின் உண்மையைக் கூறுவாரா?

அல்லது எம்.ஜி.ஆர். படத்தில் வரும் நம்பியார் போல் நடந்து கொள்வாரா? என்பதெல்லாம் தமிழர்களின் உள் மனத்தை உறுத்தும் விடைதெரியா வினாக்களாகும்.

# யுத்தவெற்றிக் கொண்டாட்டங்களில் ஈடுபடுவோரால் தமிழ் மக்களுக்கு அச்சுறுத்தல்

## மனோகணேசன் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்த வெற்றியை கொண்டாடும் ஒரு சிலர் தங்களது சுயலாப நோக்கங்களுக்காக தமிழ் மக்கள் மீது அச்சுறுத்தல் விடுப்பதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான துரதிஷ்டவசமான சம்பவங்கள் இடம்பெறாதிருக்க நாட்டின் சட்டம் ஒழுங்கு முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டியது அவசியமானதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்களுக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக தான் எவர் மீதும் குற்றம் சுமத்தவில்லை. எனினும் சிலரின் செயற்பாடுகள் காரணமாக தமிழ் மக்கள் பீதியடைந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அவ்வாறான நடவடிக்கை எடுப்பது தமிழ் மக்களுக்கு மாத்திரமல்ல முழு நாட்டிற்கும் நல்லது என தெரிவித்துள்ள மனோ கணேசன் ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் கூறியதை அடிமட்டத்தில் இருந்து நடைமுறைப்படுத்துமாறும் கேட்டுள்ளார்.

அத்துடன் யுத்த வெற்றிக் கொண்டாட்டங்களில் ஈடுபடும் கும்பல்களினால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கைக்கு பல்வேறு வழிகளில் அசௌகரியங்கள் ஏற்பட்டுள்ளதாக ஆறு அரசியல் கட்சிகள் பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ளன.

எனவே பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு குறித்த கட்சிகள் பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

அத்துடன் தமிழ், முஸ்லிம் மக்கள் மற்றும் எதிர்க்கட்சியினருக்கு இடையூறுகளை ஏற்படுத்தும் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளன.

புதிய இடதுசாரி முன்னணி, எக்ஸ் அணி, சோசலிசக் கட்சி, உலக ஒத்துழைப்புக்கான மாநாடு, சமசமாஜ மாற்று அணி, ஐக்கிய சோசலிக் கட்சி ஆகியன இந்த கோரிக்கையை விடுத்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-6)

# போர் நடைபெற்ற பகுதிகளில் அதன் தடயங்களை அழிக்கும் நடவடிக்கையில் இலங்கைப் படையினர்

## அமெரிக்க பேராசிரியர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

வடபகுதியில் இறுதிக்கட்டப் போர் தீவிரமாக இடம்பெற்ற முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளிவாய்க்கால் பகுதியில் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தி அப்பாவி தமிழர்களை கொன்றது தொடர்பான ஆதாரங்களை அழிக்கும் நடவடிக்கையில் இலங்கைப் படையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர் என அமெரிக்கப் பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர் குற்றம் சாட்டியுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கைப் படையினருக்கும் இடையே உச்சக் கட்டப் போர் நடைபெற்று வந்த போது இலங்கைப் படையினர் போர் மரபுகளை மீறும் வகையில் தடைசெய்யப்பட்ட பயங்கர ஆயுதங்களைப் பயன்படுத்தி அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடத்தியதாக மனித உரிமைகள் அமைப்புகள் பலவும் குற்றம் சாட்டியிருந்தன.

அத்துடன் சன நெரிசல் அதிகமாகவுள்ள பகுதிகளில் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துவதில்லை என்ற தமது வாக்குறுதிகளை மீறும் வகையில் தொடர்ச்சியாக ஆட்லறி எறிகணைகளையும் கொத்துக் குண்டுகளையும் படையினர் பயன்படுத்தியதால் பாரிய உயிரிழப்புகள் ஏற்பட்டன. இவ்வாறான ஆயுதங்கள் பயன்படுத்துவதை உறுதி செய்யும் செய்மதி ஒளிப்படங்கள் தம்வசம் இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்திருந்தது.

இந்நிலையில் போர் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் பகுதியிலுள்ள தடயங்களை அழிக்கும் முயற்சியில் இலங்கை இராணுவம் இப்போது தீவிரமாக ஈடுபட்டு வருவதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

போர்ப் பகுதியில் சிதறிக் கிடக்கும் உடலங்கள் அவசரமாக இராணுவத்தால் அகற்றப்பட்டு வருவதாகவும் தற்காலிகமாக இயங்கி வந்த மருத்துவமனைக் கட்டடங்களும் இடித்து தரைமட்டமாக்கப்பட்டு வருவதாகவும் அமெரிக்காவின் இல்லினாஸ் பல்கலைக்கழகப் பேராசிரியர் பிரான்ஸிஸ் அன்ரனி குற்றம் சாட்டியுள்ளார்.

இதன்மூலம் இழப்புக்களை குறைத்துக் காட்டுவதற்கும் பாரிய கனரக ஆயுதங்கள் பயன்படுத்தவில்லை எனக் காட்டிக் கொள்வதற்கும் இலங்கை அரசாங்கம் முற்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிடுகின்றார். (ஓ-6)

## ஆரோக்கிய அன்னை திருவிழா

(ஊர்காவற்றுறை)

கரம்பன் புனித – செபஸ்தியார் ஆலயப் பங்கைச் சேர்ந்த வேளாங்கண்ணி ஆரோக்கிய அன்னை திருவிழா இம்மாதம் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ். குடாநாட்டிலுள்ள அனைத்து மரியாள் ஆலயங்களிலும் வைகாசி வணக்கமாத இறுதிநாளான அன்று வழிபாடுகள் நடைபெறவுள்ளன. (ஓ-72)

## திருமறைக் கலாமன்றம் நடத்தும் சிறுவர் கலை நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

சுவிஸ் நாட்டின் அபிவிருத்திக்கும், ஒத்துழைப்பிற்குமான முகவர் அமைப்பின் ஆதரவுடன் திருமறைக் கலாமன்றம் நடத்தும் சிறுவர் பாசறையும், கலை நிகழ்வுகளும் இன்றும் சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணி முதல் பி.ப 5.30 மணிவரை திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

சுவிஸ் நாட்டின் அபிவிருத்திக்கும், ஒத்துழைப்பிற்குமான முகவர் அமைப்பின் ஆதரவுடன் திருமறைக் கலாமன்றம் கடந்த டிசெம்பர் மாதம் முதல் இமையாணன், புத்தூர், சின்னமடு, குப்பிளான், சில்லாலை ஆகிய பிரதேசங்களில் முன்னெடுத்த சிறுவர் செயற்திட்டங்களின் சிறப்பு நிகழ்வுகளாக இந்நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

குறித்த பிரதேசங்களில் இச்செயற்திட்டத்தில் பங்கு கொண்ட சிறார்கள் பங்குபற்றும் இந்நிகழ்வில் இன்று பகல் முழுவதும், நாளை மதியம் வரையும் சிறுவர் பாசறை இடம்பெறும். இதில் கலைசார்ந்த பயிற்சிகள், போட்டிகள் உட்பட சிறுவர்களுக்கான பல்வேறு செயற்பாடுகள் நடைபெறும்.

நாளை பி.பி. 2 மணிக்கு பொது நிகழ்வுகள் ஆரம்பமாகும். இதில் சிறுவர்களின் நாடகங்கள், பாடல்கள், நடனங்கள் உட்பட பல்வேறு அரங்க நிகழ்வுகள் இடம்பெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக, சுவிஸ் நாட்டின் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான முகவர் அமைப்பைச் சேர்ந்த ஹான்ஸ் பீற்றர் எற்ரர் கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் சிறப்பு விருந்தினர்களாக, கோப்பாய் பிரதேச செயலர் அன்ரன் மோகன்ராஸ், உடுவில் பிரதேசச் செயலர் திருமதி. மஞ்சுளாதேவி சதீசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ)

## மனிதாபிமான உதவிகள் வழங்க முழு அளவிலான அனுமதி வேண்டும்

## யுனிசெப் கோரிக்கை

நிவாரணக் கிராமங்களில் தங்கியிருக்கும் பெண்கள் மற்றும் சிறு வர்களுக்கு மனிதாபிமான உதவிகள் சென்றடைவதற்கு முழு அளவிலான அனுமதி வேண்டுமென ஐக்கிய நாடுகளுக்கான சிறுவர் கல்வி நிதியம் கோரிக்கை விடுத்துள்ளது.

நிவாரணக் கிராமங்களிலும் முகாம்களிலும் வாழும் மக்களுக்கு மிகவும் அவசியமான குடிநீர், பொது சுகாதார வசதிகள், போசாக்கு உணவு, முதியோர் மற்றும் சிறுவர்களுக்கான சுகாதார நலன் பேணல் ஆகியவற்றை வழங்கும் வகையில் தமது அமைப்பு அர்ப்பணிப்புடன் இருப்பதாக யுனிசெப் இன் அதிகாரி அனான் வனவன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கும் பொருட்டு பெருந்தொகை ஊட்டச்சத்து உணவு வகைகளை களஞ்சியப்படுத்தி வருவதாக உலக உணவு ஸ்தாபனம் தெரிவிக்கின்றது. (ஓ-6)


## ஜப்பானில் 300 பேருக்கு பன்றிக்காய்ச்சல் பாதிப்பு

(டோக்கியோ)

பன்றி காய்ச்சல் 41 நாடுகளில் பரவி உள்ளது. 85 பேர் உயிரிழந்துள்ளனர். 11 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆசிய நாடுகளில் ஜப்பானில் பன்றி காய்ச்சல் வேகமாக பரவி உள்ளது. இதுவரை 300 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். நோய் மேலும் பரவாமல் தடுக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. (ஓ-6)

## சுவாமி விவேகானந்தரின் வீரமுரசு

### தன்னடக்கம்



முயற்சியின்மையை எல்லா வழியாலும் நீக்க வேண்டும். முயற்சி என்பது எதிர்த்தல் என்று எப்போதும் பொருள்படும். உள்ளத்தையும் உடலையும் பற்றியவை அனைத்தையும் எதிர்த்து நில். எதிர்ப்பது கைகூடும் போது உனக்கு அமைதியும் உண்டாகும்.

தன்னை வெறுக்கத் தொடங்கி விட்டவனுக்கு கீழ்நிலை இழுத்துச் செல்லும் கதவு முன்னரே திறந்து வைக்கப்பட்டுள்ளது. ஒரு நாட்டினரிடம் அது உண்மையாகும். நம்மை நாம் வெறுக்காமலிருப்பதுவே நமது முதற்கடமை. ஏனெனில், முன்னேற்றம் வேண்டினால் நாம் முதலில் நம்மிடமும், பின்னர் தெய்வத்திடமும் நம்பிக்கை வைக்க வேண்டும்.

# தமிழர்களின் மனதில் இடம்பிடிக்கும் வகையில் ஜனாதிபதியால் திட்டங்கள் முன்வைக்கப்படவில்லை

## பேராசிரியர். சூர்ய நாராயணன் தெரிவிப்பு

(புதுடில்லி)

இலங்கை வாழ் தமிழர்களின் மனதில் இடம் பிடிக்கும் வகையில் இதுவரையில் அந் நாட்டு ஜனாதிபதி எவ்விதத் திட்டங்களையும் முன்வைக்கவில்லை என பேராசிரியர் சூர்ய நாராயணன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தமிழர்களுக்குச் சம உரிமை கொடுக்கப்படுகிறதா என்பதை இந் தியாவும் மற்ற உலக நாடுகளும் உறுதி செய்ய வேண்டும் என அரசியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை விவகாரத்தில் சிறந்த பேராசிரி யராக விளங்கும் சூர்ய நாராயணன் மேலும் கூறுகையில்,

புலிகளுக்கு எதிரான போரில் ஜனாதிபதி ராஜபக்ஷ வெற்றி பெற்றிருக்கலாம். ஆனால், அங்கு வசிக்கும் தமிழர்களின்மனதில் இடம் பிடிக்கும் வகையிலான திட்டங்களைச் செயற் படுத்துவது குறித்து அவர் எதுவும் தெரிவிக் கவில்லை.

தமிழர்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளுக் குப் போதிய அளவில் அதிகாரத்தைப் பகிர்ந்து கொடுப்பதன் மூலம் தான், பிரச்சினைக்கு உண்மையான தீர்வு காண முடியும்.

அத்துடன் தமிழர்கள் உரிமை தொடர்பில், ஜனாதிபதி ராஜபக்ஷ, தான் அளித்த வாக்கு றுதியை நிறைவேற்றுவார் என நம்புவதாக வும், இந்த விடயத்தில் சர்வதேச நாடுகள் அவ ருக்கு நெருக்கடி கொடுக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ-6)

# மே 28 இல் சென்னையில் அமைதிப் பேரணி

(சென்னை)

இலங்கையில் நடைபெற்ற போரில் தமிழர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகை யில் சென்னையில் மே 28 ஆம் திகதி அமை திப் பேரணி நடைபெறும் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் அறிவித்துள்ளார்.

இது குறித்து நேற்று முன்தினம் வியாழக் கிழமை அவர் வெளியிட்ட அறிக்கையில்,

இலங்கை அரசு மேற்கொண்ட தமிழின அழிப்பு நடவடிக்கைகளை விடுதலைச் சிறுத் தைகள் வன்மையாகக் கண்டிக்கிறது. இலங்கை அதிபர் ராஜபக்ஷ அனைத்துலக நீதிமன்றத் தின் மூலம் விசாரணை நடத்தி தண்டிக்க ஐ.நா. சபை முன்வர வேண்டும்.

கொல்லப்பட்டவர்களின் உடல்களை எஞ்சியிருக்கும் அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

உறவினர்கள் அடையாளம் காணும் வரை உடல்களை பாதுகாப்பாக வைத்திருக்க உரிய ஏற்பாடுகளை இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் செய்ய வேண்டும்.

போர் முடிந்து விட்டது என்று இலங்கை அரசு அறிவித்துள்ள நிலையில், ஈழத் தமிழர் களுக்குத் தேவையான உணவு, மருந்து, குடிநீர் போன்ற அடிப்படை வசதிகளை சர்வ தேச தொண்டு நிறுவனங்கள் மூலம் செய்ய வேண்டும்.

இலங்கை அரசை கண்டித்தும் பலியான ஈழத் தமிழ்ச் சொந்தங்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும் மே 28 ஆம் திகதி சென்னையில் அமைதிப் பேரணி நடை பெறும் என்று திருமாவளவன் தெரிவித்துள் ளார். (ஓ-6)

# குவாண்டனாமோ தடுப்பு சிறையை மூடுவது குறித்து ஒபாமா விளக்கம்

குவாண்டனாமோ தடுப்பு சிறையை மூடு வது என்ற தனது திட்டத்தை அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா நியாயப்படுத்தியுள்ளார். இந்தத் தடுப்புச் சிறையும், கொடூரமான விசாரணை முறைகளும் அமெரிக்காவை மற்றவர்களி டம் இருந்து தனிமைப்படுத்தி விட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் அமெரிக்காவின் தேசிய பாதுகாப் புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் யாரும் அமெ ரிக்காவுக்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் அமெரிக்க அதிபர் கூறியுள்ளார்.

குவாண்டனாமோ வளைகுடாவில் உள்ள இராணுவச் சிறைக்குள் தடுத்து வைக்கப் பட்டிருக்கும் பயங்கரவாதச் செயல்களில் ஈடு பட்டதாக சந்தேகிக்கப்படும் நபர்களில் மேலும் பலர் அமெரிக்காவின் அதியுயர் பாதுகாப்பு சிறைகளுக்கு மாற்றப்படுவதையே தான் விரும்புவதாக அமெரிக்க அதிபர் கூறியுள் ளார்.

குவாண்டனாமோவில் தடுத்து வைக்கப்பட் டுள்ளோர் முடிந்தவரை அமெரிக்க சிவிலி யன் நீதிமன்றங்களிலேயே விசாரிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

பயங்கரவாதிகள் ஆட்களைத் தேர்ந்தெ டுக்கும் ஒரு களமாகவே இது செயற்படுவ தாகவும் அமெரிக்க விரோதிகளின் மனோதி டத்தை வலுப்படுத்துவதாக இருப்பதாகவும் ஒபாமா மேலும் தெரிவித்தார். (ஓ-6)

# ஈராக்கில் வன்முறைச் சம்பவங்கள் 60க்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு

(பக்தாத்)

ஈராக்கில் வியாழக்கிழமை பல்வேறு இடங் களில் நடந்த குண்டுவெடிப்பு, தற்கொலைப் படைத்தாக்குதலில் 23 பேர் உயிரிழந்துள்ள னர்.

பக்தாத் ஷிடேயில் புதன்கிழமை நடந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 40 பேர் உயி ரிழந்தனர். இதைத் தொடர்ந்து மறுநாளே பல்வேறு இடங்களில் வன்முறைச் சம்பவங் கள் நடந்துள்ளன.

தெற்கு போரா பகுதியில் மக்கள் நெருக்கம் அதிகமாக இருக்கும் மிகவும் பிரபலமான “ஆசிரியன் சந்தையில் பலத்த சத்தத்துடன் மனித வெடிகுண்டு வெடித்தது.

இதில்12 பேர் உயிரிழந்தனர் .25பேர் காயமடைந்தனர் என்று பாதுகாப்பு அதிகாரி கள் தெரிவித்துள்ளனர்.

இத்தாக்குதல் சந்தைப் பகுதியைக் கடக்க கவிருந்த அமெரிக்க ரோந்து காரினை குறி வைத்து நடத்தப்பட்டதாக உள்துறை மற்றும் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சந்தைப் பகுதியில் தாக்குதல் நடந்த சிறிதுநேரத்தில் பக்தாத் காவல் நிலையத்தில் தேவையற்ற பொருட்கள் வைக்கப்பட்ட பெட்டி யில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித் ததில் 3 பொலிஸார் உயிரிழந்தனர். 12 அதிகாரிகள் உட்பட 20 பேர் காயமடைந்துள்ளனர்.

வடக்கு மாவட்டமான கிர்குக் பகுதியில் நாளின் ஆரம்பமே இரத்தக் களரியாக மாறி யது. இங்கு தீவிரவாதத்திற்கு எதிரான அமைப் பினைச் சேர்ந்த 8 பேர் தங்களுடைய சம் பளத்தை வாங்குவதற்காக வரிசையில் நின்று கொண்டிருந்தனர்.


அப்போது நடந்த தற்கொலைப் படைத் தாக்குதலில் 8 பேரும் உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஜூன் 30க்குள் ஈராக்கில் உள்ள அமெரிக் கப்படைகள் தங்கள் முகாம்களை விட்டு வெளியேறவுள்ளனர்.

இதுவே மேற்கண்ட வன்முறைச் சம்பவங் களுக்குக் காரணமாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. (ஓ-6)

# இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து நடத்திய 2008 உயர்தர பரீட்சையில் “3A, 2AB” சித்தி பெற்ற வலிகாம கல்வி வலய மாணவர்களின் கௌரவிப்பு நிகழ்வு -09.05.2009


## மானிப்பாய் மகளிர் கல்லூரி







## வட்டு. இந்துக் கல்லூரி





# கில்லி போல் துடுப்பெடுத்தாடினார் கில்கிறிஸ்ட்; டெக்கான் சார்ஜர்ஸ் இறுதிப் போட்டிக்கு நுழைவு

## டில்லி டேர் டேவில்ஸ் ஏமாற்றம்

(சென்சூரியன்)

அடம் கில்கிறிஸ்டின்அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் டெக்கான் சார்ஜர்ஸ் அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதி போட்டிக்கு முன்னேறியது. லீக் சுற்றில் அசத்திய டில்லி டேர் டேவில்ஸ் அணி அரையிறுதியுடன் வெளியேறியது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) அமைப்பின் 8 அணிகள் மோதும் 2ஆவது இருபது-20 தொடர் தென்னாபிரிக்காவில் நடை பெற்று வருகிறது.

இதில் நேற்று சென்சூரியனில் நடை பெற்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் சேவாக் தலைமையிலான டில்லி டேர் டேவில்ஸ் அணியும் கில்கிறிஸ்ட் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற டெக்கான் சார்ஜர்ஸ் அணித் தலைவர் கில்கிறிஸ்ட் முதலில் களத்தடுப்பை தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய டில்லி டேர் டேவில்ஸ் அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி அளித்தது.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களான காம்பீரும் வோர்னரும் பூச்சியத்துடன் ஆட்டம் இழக்க டில்லி டேர்டேவில்ஸ் முதலாவது ஓவரில் ஓட்டமெதனையும் எடுக்காமல் 2விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது.

எனினும் 3ஆவது விக்கெட்டுக்காக இணைந்த சேவாக்-டில்சான் ஜோடி அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி அணியை சரிவிலிருந்து மீட்டெடுத்தனர்.

இந்த ஜோடி 58 பந்துகளில் 85 ஓட்டங்களை குவித்த போது அணித்தலைவர் சேவாக் 31 பந்துகளில் (5 பவுண்டரிகள் அடங்கலாக) 39 ஓட்டங்களை எடுத்து ஆட்டம் இழந்தார்.

தொடர்ந்து டி வில்லியர்ஸ் களமிறங்க மறுமுனையில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய திலகரட்ண டில்சான் தனது 35ஆவது பந்தில் அரைச்சதத்தை பூர்த்தி செய்தார்.

இந்த ஜோடி 4ஆவது விக்கெட்டுக்காக 48 ஓட்டங்களை சேர்த்தபோது டி வில்லியர்ஸ் 21 பந்துகளில் (2 சிக்ஸர்கள் அடங்கலாக) 26 ஓட்டங்களை எடுத்து ஆட்டம் இழந்தார். தொடர்ந்து களமிறங்கிய டினேஸ் கார்த்திக் 09, பாத்தியா 04 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்து ஏமாற்றினர்.

இறுதியில் டில்லி டேர் டேவில்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 153 ஓட்டங்களை எடுத்தது.

இதில் திலகரட்ண டில்சான் 51 பந்துகளில் (7 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 65 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் ஹரிஸ் 3 விக்கெட்டுக்களையும் ஆர்.பி.சிங் 2 விக்கெட்டுக்களையும் சைமண்ட்ஸ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 154 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய டெக்கான் சார்ஜர்ஸ் அணிக்கு கில்கிறிஸ்ட் ஆரம்ப முதலே அதிரடியாகத்துடுப்பெடுத்தாடி ஓட்டங்களை குவித்தார்.

எனினும் மறுமுனையில் கிப்ஸ் பூச்சியத்துடன் ஆட்டம் இழக்க டெக்கான் சார்ஜர்ஸ் அணி 1.2 ஓவர்களில் 22 ஓட்டங்களை எடுத்து முதலாவது விக்கெட்டை இழந்தது.

தொடர்ந்து பிலாகியா களமிறங்க மறுமுனையில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய கில்கிறிஸ்ட் 17 பந்துகளில் அரைச்சதம் அசத்தினார்.

மறுமுனையில் பிலாகியா 10 ஓட்டங்களுடன் ஆட்டம் இழக்க டெக்கான் சார்ஜர்ஸ் அணி 8 ஓவர்களில் 91 ஓட்டங்களை எடுத்து 2 ஆவது விக்கெட்டை இழந்தது.

தொடர்ந்து சுமன் களமிறங்க மறுமுனையில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய அணித் தலைவர் கில்கிறிஸ்ட் 35 பந்துகளில் (10 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள் அடங்கலாக) 85 ஓட்டங்களை குவித்து ஆட்டம் இழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய சைமண்ட்ஸும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாட டெக்கான் சார்ஜர்ஸ் அணியின் ஓட்ட எண்ணிக்கை வேகமாக அதிகரித்தது.




எனினும் ஸ்சமண்ட்ஸ் 15 பந்துகளில் (2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 24 ஓட்டங்களை எடுத்து ஆட்டம் இழக்க டெக்கான் சார்ஜர்ஸ் அணி 13.4 ஓவர்களில் 137 ஓட்டங்களை எடுத்து 4ஆவது விக்கெட்டை இழந்தது.

தொடர்ந்து 5ஆவது விக்கெட்டுக்காக இணைந்த சுமன்-ரோகித் சர்மா ஜோடி சிறப்பாகத் துடுப்பெடுத்தாட டெக்கான் சார்ஜர்ஸ் அணி 17.4 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 154 ஓட்டங்களை குவித்து 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. இதில் ரி.எஸ்.சுமன் 24 ஓட்டங்களையும் ரோகித் சர்மா 05 ஓட்டங்களையும் ஆட்டம் இழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் அமிற் மிஸ்ரா 4 ஓவர்கள் பந்துவீசி 19 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் நெகரா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இப்போட்டியில் ஆட்டநாயகனாக டெக்கான் சார்ஜர்ஸ் அணித்தலைவர் கில் கிறிஸ்ட் தெரிவானார். இவ்வெற்றியின் மூலம் டெக்கான் சார்ஜர்ஸ் அணி ஐ.பி.எல். இரண்டாவது இருபது-20 தொடரில் இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

## இரண்டாவது அரையிறுதியில் இன்று சென்னை-பெங்களூர் மோதல்

(ஜோகனஸ்பேர்க்)

ஐ.பி.எல். இருபது-20 கிரிக்கெட் தொடரின் 2ஆவது அரையிறுதி ஆட்டம் இன்று ஜோகனஸ்பேர்க்கில் நடக்கிறது.

இதில் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் கும்ளே தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியும் மோதுகின்றன.

சென்னை அணி லீக் ஆட்டத்தில் 8 வெற்றியைப்பெற்றது. 5 ஆட்டத்தில் தோல்வி அடைந்தது. பெங்களூர் அணி நேற்று முன் தினம் கடைசி லீக் ஆட்டத்தில் டெக்கான் சார்ஜர்ஸ் அணியை வென்றதன் மூலம் அரை இறுதி வாய்ப்பை பெற்றது.

கடந்த முறை 7ஆவது இடத்தை பிடித்த பெங்களூர் அணி தற்போது சிறப்பாக ஆடி வருகிறது. லீக் ஆட்டத்தில் 7இல் வெற்றி பெற்றது. 7ஆட்டத்தில் தோல்வியடைந்தது. இரு அணிகளும் லீக் ஆட்டத்தில் தலா ஒரு வெற்றி பெற்றன.

சென்னை அணியில் ஹைடன், ரெய்னா ஆகியோர் தொடர்ந்து அதிரடியாக விளையாடி வருகிறார்கள். க்டந்த 2 ஆட்டத்தில் ஓய்வு பெற்ற ஹைடன் இன்றைய அரை இறுதியில் முத்திரை பதிப்பார். பந்து வீச்சில் முரளிதரன் மிகப் பெரிய பலமாக உள்ளார்.

பெங்களூர் அணியின் துடுப்பாட்டம் சிறப்பாக இருக்கிறது. கலிஸ், ரெய்லர், பௌச்சர், புதுமுக வீரர் பான்டே ஆகியோர் முத்திரை பதிக்க கூடியவர்கள். இன்றைய போட்டி இலங்கை நேரப்படி இரவு 8 மணிக்கு ஆரம்பமாகிறது.

## பெண்கள் ஐ.பி.எல். தொடர்; இந்திய வீராங்கனைகள் கோரிக்கை

ஆண்களுக்கான ஐ.பி.எல். தொடர் மகத்தான வெற்றி பெற்றுள்ளது. இதையடுத்து பெண்களுக்கென பிரத்தியேகமாக ஐ.பி.எல். தொடர் ஒன்றை நடத்த வேண்டுமென கோரிக்கை எழுந்துள்ளது.

இந்தியன் கிரிக்கெட் சபையால் (பி.சி.சி.ஐ) கடந்த ஆண்டு உருவாக்கப்பட்ட இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) அமைப்பின் முதலாவது இருபது-20 தொடர் வெற்றிகரமாக முடிந்தது.

இந்த ஆண்டுக்கான ஐ.பி.எல். தொடர் சமீபத்தில் இந்தியாவில் நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தல் காரணமாக தென்னாபிரிக்காவுக்கு மாற்றப்பட்டது. தற்போது தென்னாபிரிக்காவில் இத்தொடர் நடந்து கொண்டிருக்கிறது.

இந்த ஐ.பி.எல். இருபது-20 தொடர் சிறுவர் முதல் முதியவர்கள்வரை யாரையும் விட்டு வைக்கவில்லை. நாடு, மதம், இனம் வித்தியாசமின்றி நடந்து கொண்டிருக்கும் இது போன்ற தொடர் பெண்கள் கிரிக்கெட் அரங்கில் அடியெடுத்து வைக்க வேண்டும் என அஞ்சும் சோப்ரா, அமிதா சர்மா உள்ளிட்ட இந்திய வீராங்கனைகள் விருப்பம் தெரிவித் துள்ளனர்.

இது குறித்து அஞ்சும் சோப்ரா கூறுகையில்;

கிரிக்கெட் உலக அளவில் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டிருக்கிறது. இருபது-20 போட்டிகளும் மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்துள்ளது. ஐ.பி.எல். போன்ற தொடர்கள் பெண் கள் கிரிக்கெட் அரங்கில் இடம் பெறும் பட்சத்தில் பெண்கள் கிரிக்கெட்டும் அசுர வளர்ச்சி அடையும். இந்திய பெண்கள் கிரிக்கெட்டுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் பி.சி.சி.ஐ. செய்துவருகிறது. இனி வரும் காலங்களில் பெண்களுக்கும் ஐ.பி.எல். போன்ற தொடர்கள் பி.சி.சி.ஐ. நடத்தலாம். இது போன்ற தொடர்கள் நடத்துவதன் மூலம் பெண்கள் கிரிக்கெட் மக்களிடம் அதிக வரவேற்பை பெறும் என்றார்.

இதேவேளை இது குறித்து அமிதா சர்மா கூறுகையில்;

கிரிக்கெட் வீராங்கனைகள் ஐ.பி.எல். தொடரில் ஏற்படும் அனுபவத்தை ரிவியில் பார்த்து தெரிந்து கொள்ள விரும்பவில்லை. நேரடியாக இது போன்ற தொடர்களில் பங்கேற் பதன் மூலம் ரியலாக அனுபவத்தை பெறவிரும்புகின்றோம் என்றார்.

இந்திய அணியின் நடுத்தர வரிசை துடுப்பாட்ட வீராங்கனை ரீமா மல்கோத் ரா கூறுகையில்;

இரண்டாவது ஐ.பி.எல். தொடர் வெற்றிகரமாக நடக்கிறது. இது உலக அளவில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. இது போன்ற தொடர்கள் பெண்கள் கிரிக்கெட்டில் இடம் பெற வேண்டும்.

பெண்கள் கிரிக்கெட் விரை வாக வளர்ந்து கொண்டிருக்கிறது. இந்த சமயத்தில் இது போன்ற தொடர்கள் இடம் பெற்றால் மேலும் வளர்ச்சி அடையும் என்றார்.

## அசத்தும் சகலதுறை வீரர்கள்




தென்னாபிரிக்காவில் நடக்கும் இரண்டாவது ஐ.பி.எல். இருபது-20 கிரிக்கெட் தொடர் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது.

கடந்த முறை சம்பியன் பட்டம் வென்ற ராஜஸ்தான் றோயல்ஸ் அணி இம்முறை அரையிறுதிக்குக் கூட முன்னேற முடியாத அதிர்ச்சியும் அரங்கேறியுள்ளது.

விறுவிறுப்பு மிக்க அரையிறுதி போட்டிகள் நேற்று முதல் ஆரம்பமாகின. இத் தொடரில் துடுப்பாட்டம், பந்துவீச்சு என இரண்டிலும் அசத்தி சகலதுறையிலும் ஜொலித்த வீரர்களை இங்கு பார்ப்போம்,

**ரோகித் சர்மா**

டெக்கான் சார்ஜர்ஸ் அணியின் நம்பிக்கை நட்சத்திரம் ரோகித் சர்மா. சிறப்பாக துடுப்பாட்டம் செய்த இவர், சுழற்பந்து வீச்சில் எதிரணி துடுப்பாட்ட வீரர்களை கதிகலங்கச் செய்தார். இவரது அபார ஆட்டம் டெக்கான் அணியின் வெற்றிக்கு பக்க பலமாக அமைந்தது என்பதில் சந்தேகம் இல்லை.

**யுவராஜ் சிங்**

கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணித்தலைவர் யுவராஜ் சிங்கின் செயற்பாடு இத்தொடரில் பாராட்டும் படியாக அமைந்தது. ஆரம்பத்தில் சற்று தடுமாறினாலும் பின்னர் நல்ல நிலைக்குத் திரும்பி அசத்தினார் யுவராஜ் சிங். துடுப்பாட்டத்தில் நம்பிக்கை அளித்த இவர், இத் தொடரில் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ், டெக்கான் சார்ஜர்ஸ் அணிகளுக்கு எதிராக ஹட்ரிக் விக்கெட்டுக்கள் வீழ்த்தி பந்து வீச்சிலும் அசத்தியுள்ளார்.

**ரவீந்திர ஜடேஜா**

இளமைத் துடிப்புடன் ஐ.பி.எல். தொடரில் அசத்தினார் ரவீந்திர ஜடேஜா. ராஜஸ்தான் றோயல்ஸ் அணியில் விளையாடிய இவர் துடுப்பாட்டத்தில் ஆறுதல் அளித்தார். இதுவரை ஒரு அரைச்சதம் கூட அடிக்காவிட்டாலும், நெருக்கடியான கட்டங்களில் அணியின் ஓட்டங்கள் குவிப்புக்கு கைகொடுத்தார். சுழற் பந்து வீச்சிலும் நம்பிக்கை அளித்த இவர் இத் தொடரில் 295 ஓட்டங்கள், 6 விக்கெட்டுக்கள் வீழ்த்தியுள்ளார்.

**ரெய்னா**

சென்னை சுப்பர் கிங்ஸ் அணி வீரர் சுரேஸ் ரெய்னா, இத் தொடரில் அசத்தி விட்டார். அதிரடியில் மிரட்டிய இவர் இதுவரை 414 ஓட்டங்கள் சேர்த்துள்ளார். சென்னை சுப்பர் கிங்ஸ் அணி அரையிறுதிக்கு முன்னேறியதில் முக்கிய பங்கு ரெய்னாவுக்கு உண்டு. எதிரணி துடுப்பாட்ட வீரர்களுக்கு கடும் நெருக்கடி கொடுத்தது இவரது சுழற் பந்து வீச்சு.

**கலிஸ்**

எதிர்பார்த்த அளவுக்கு ஜொலிக்கா விட்டாலும், பொறுப்புடன் ஆடி அணிக்கு நம்பிக்கை அளித்துள்ளார் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் வீரர் கலிஸ். முக்கிய லீக் போட்டிகளில் துடுப்பாட்டத்திலும் பந்து வீச்சிலும் அசத்திய வீரர் அணியின் எழுச்சிக்கு முக்கிய பங்காற்றியுள்ளார்.

**ஆறுதல் அளித்தவர்கள்**

இரண்டாவது ஐ.பி.எல். தொடரில் அதிகம் எதிர்பார்க்கப்பட்ட சகலதுறை வீரர்கள் சிலர் பெரிய அளவில் சாதிக்கவில்லை. கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி வீரர் இர் பான் பதான் பந்து வீச்சில் மட்டுமே அசத்தினார். துடுப்பாட்டத்தில் சோபிக்க தவறினார். இவர் தவிர ராஜஸ்தான் றோயல்ஸ் அணி வீரர் யூசுப்ப தான், மும்பை இந்தியன்ஸின் பிராவோ, ஜெயசூரியா, சென்னை சுப்பர் கிங்ஸின் ஜேக்கப் ஓரம், அல்பி மோர்கல், டில்லி டேர் டேவில்ஸ் அணியின் விக்டோரி ஆகியோர் பெரிய அளவில் நம்பிக்கை அளிக்க தவறினர்.

## அரசியல் தீர்வை முன்...

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனிடம் கலந்துரையாடிய பின்னர், இலங்கை ஜனாதிபதியுடன் ஹிலாரி கிளின்டன் தொலைபேசியில்உரையாடியுள்ளார்.

யுத்த வலயத்தின் மனிதாபிமான நிலைவரங்களை நேரில் பார்வையிட்டு மதிப்பீடுகளை மேற்கொள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உள்ளிட்ட தொண்டு நிறுவனங்களுக்கு அனுமதியளிக்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 26 வருடங்களாக இடம்பெற்ற மோதல் முடிவுக்கு வந்திருப்பதால் தமிழர்களது உரிமைகளை உறுதிப்படுத்துமாறு அவர் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகளின் அடிப்படையிலேயே எதிர்கால சமாதானம் நிர்ணயிக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கு வழங்கப்படவிருந்த சர்வதேச நாணயநிதியத்தின் கடன் குறித்து தற்போது மீள் பரிசீலனை செய்யப்படும் எனவும் அமெரிக்க ராஜாங்க செயலகத்தின் பேச்சாளர் இயன் கெலி இதன்போது தெரிவித்தார்.

இலங்கையில் மோதல்கள் இறுதிக்கட்ட இராணுவ நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டிருந்த தருணத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் கடனை வழங்குவதற்கு இது தருணமல்ல எனத் தெரிவித்து அமெரிக்கா கடன் வழங்குவதற்கான நடவடிக்கைகளைப் பின்போட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## அரசியல் நல்லிணக்கம்...

போரினால் இடம்பெயர்ந்த சுமார் 3 இலட்சம் மக்கள் தங்கியுள்ள வவுனியா இடைத்தங்கல் முகாம் பகுதிக்கு விஜயம் மேற்கொண்டு அங்குள்ள நிலைமைகளை பார்வையிடுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தனது இலங்கை விஜயம் விடுதலைப் புலிகள் மீதான போரில் தாங்கள் பெற்றுள்ள வெற்றிக்கான சர்வதேச அங்கீகார முத்திரையைப் பெற இலங்கை அரசுக்கு உதவக் கூடும் என்பது குறித்து பான் கீ மூன் மிகவும் விழிப்புடன் இருக்கிறார் என்று ஐ.நாவின் மூத்த அதிகாரிகள் கூறியுள்ளனர்.

போரின் காரணமாக தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி தற்போது அரச கட்டுப்பாட்டிலுள்ள முகாம்களில் தங்கியுள்ள சுமார் 3 இலட்சம் மக்களின் மனிதாபிமானத் தேவைகளில் கவனம் செலுத்துவதுதான் அவரது பயணத்தின் பிரதான நோக்கம்.

இந்த முகாம்கள் அரச படையினரால் நிர்வகிக்கப்படக் கூடாது. அங்குள்ள மக்கள் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் ஐ.நாவின் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

போரில் இலங்கை அரசு வெற்றி பெற்றுள்ள நிலையில் தற்போது சமாதானத்தை வென்றெடுக்க ஒரு வாய்ப்பு ஏற்பட்டுள்ளதை இலங்கை அரசிற்கு அவர் நினைவூட்டுவார் எனவும் நாட்டில் தாமும் சம பங்காளிகள் என தமிழ் மக்கள் எண்ணும் வகையிலான ஒரு அரசியல் தீர்வு ஏற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மோதல் இடம்பெற்ற முல்லைத்தீவுப் பகுதிக்கும் ஐ.நா. செயலர் செல்வார் என தெரிவிக்கப்படுகிறது. (ச-5,14)

## பிரபாகரனின் உடல்...

போது அவர் எந்த இடத்தில் கொல்லப்பட்டாரோ அதே இடத்தில் அவர் தகனம் செய்யப்பட்டார் என்றும் அவர் தெரிவித்தார்.

அவரை நினைவு கூரும் வகையில் யாரும் வந்து அஞ்சலி செலுத்த வழி ஏற்படாமல் இருப்பதற்காகவே அவர் புதைக்கப்படாமல் தகனம் செய்யப்பட்டதாகவும் அவரது உடல் தகனம் செய்யப்பட்ட போது எந்தவிதமான சுயாதீனமான கண்காணிப்பாளர்களும் தேவையில்லை என்று நாங்கள் கருதியதால் அவரது உடலை இராணுவமே தகனம் செய்துவிட்டது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தலைவர்கள் என்று அடையாளம் காணப்படாத மற்ற விடுதலைப் புலி உறுப்பினர்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளதாக கூறும் இராணுவப் பேச்சாளர்; மோதலில் கொல்லப்பட்ட அனைத்துத் தலைவர்களின் உடல்களும் தகனம் செய்யப்பட்டுவிட்டன எனவும் உறுதிப்படுத்தினார். (ச-5)


# "சுந்தர்சன்" மானிப்பாய்

23.05.2009 ஆம் திகதி
சனிக்கிழமை தொடக்கம் மாபெரும்
மலிவு விற்பனை ஆரம்பம்!

மலிவு விற்பனை

- ★ மின் விசிறிகள் ( Ceiling Fans, Table Fans, Stand Fans)
- ★ மின் அலங்கார விளக்குகள் , சுவர் விளக்குகள், மேசை விளக்குகள், கூரை விளக்குகள், (Chandiliyars, Wall Brackets, Table Lamps, Hood Fittings)
- ★ றைஸ் குக்கர்கள் (Rice Cookers), அரைக்கும் இயந்திரங்கள் (Blenders), மின் அழுத்திகள் (Iron Boxes), சாஜர் லைற்றுகள் (Charger Lights)
- ★ பல தரப்பட்ட சுவிச், பிளக் வகைகள் (Switches, Plug & Switches)
- ★ றோல் பிளக் வகைகள் (Extension cords), நீர் சுத்திகரிப்புத் தாங்கிகள் (Water Filters), மின் அடுப்பு (Hot Plates), சுடுநீர் / குளிநீர் மாற்றிகள் (Water Despensers), மின் கேத்தல்கள் (Electric Kettles)
- ★ DVD Players ,VCD Players, Boofer Sets.
- ★ கலர் ரியூப்பல்ப், கலர் 'U' பல்ப் வகைகள் (Colour T/Bulbs, Colour Energy Saving bulbs)



விசேட குறிப்பு: ஞாயிறு தினத்திலும் குறித்த மலிவு விற்பனை தொடரும் என்பதை வாடிக்கையாளருக்கு அறியத் தருகிறோம்.

சிறந்த தெரிவுகளுக்கு முந்துங்கள்! உங்கள் தேவையே எங்கள் சேவை

கட்டட ஒப்பந்தக்காரர்கள், மின் இணைப்பாளர்கள், வியாபாரிகள், வாடிக்கையாளர்களுக்கு தேவையான உபகரணங்களை மிக மலிவு விலையில் பெற்றுக் கொள்ள அரிய சந்தர்ப்பம் தவறவிடாதீர்கள்

நன்றி

SALE SALE

"சுந்தர்சன்"
யாழ் வீதி, மானிப்பாய்.

(C-2488-இ) 21.05.2009


## இந்தியாவில்...

வைக்கப்பட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு பயன்படுத்தப்படும் என்று இந்திய விமானப் படையின் செய்தித் தொடர்பாளர் விங் கமாண்டர் தருண் குமார் சின்கா தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு தற்காலிக தங்குமிட வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்காக 15 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் விரைவில் அனுப்பி வைக்கப்படும் எனவும் இந்தியா அறிவித்துள்ளது. (ச-5)

## இலங்கையின்...

கலந்து கொண்டு உரையாற்றினர். அந்நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில், இலங்கையின் எந்தப்பாகத்திற்கும் இலங்கையரான நாம் செல்லக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. பயங்கரவாதிகளிடமிருந்து இலங்கையை மீட்பதற்கு நாம் எடுத்த நடவடிக் கைகளை சிலர் எள்ளி நகையாடினர். தற் போது அதனை எமது பாதுகாப்பு படையினர் வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளனர் என்று தெரிவித்தார். (ச-14)

## இராணுவத்...

தெரிவிக்கப்பட்டது. பயங்கரவாதத் திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போரில் இராணுவத்தினரின் வெற்றியை அவர் பாராட்டியுள்ளார். (எ-3,5)

## இசை அரங்கேற்றமும் மிருதங்க அரங்கேற்றமும்

இணுவில் இளம் தொண்டர் சபை இசைத்துறை மாணவன் அ.அமிர்தலோஜனனின் இசை அரங்கேற்றமும் மிருதங்க அரங்கேற்றமும் இன்று காலை 8.15 மணிக்கு இணுவில் இளம் தொண்டர் சபை மண்டபத்தில் இடம்பெறும்.

ஆசிரியர் திருமதி கு.விஜயரகுநாதன் தலைமையில் இடம்பெறும் இவ் அரங்கேற்ற நிகழ்வில்பேராசிரியர்பொ.பாலசுந்தரம்பிள்ளை பிரதமவிருந்தினராகவும் யாழ். பல்கலைக் கழக இசைத்துறைத் தலைவர் செல்வி பாக்கியலட்சுமி நடராஜா சிறப்பு விருந்தினராகவும் ஓய்வு பெற்ற அதிபர் பொ.கமலநாதன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்கிறார். (நு)

## தமிழ் அகதி...

தெரிவித்துள்ளார்.

சிவில் யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில் அதிகளவான தமிழ் அகதிகள் அவுஸ்திரேலியாவுக்கு செல்லக்கூடும் என அவர் தெரிவித்துள்ளார். 2003-2004ஆம் ஆண்டு முதல் இதுவரையில் ஆயிரத்து 899 பேருக்கு அவுஸ்திரேலியாவில் அரசியல் தஞ்சம் வழங்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-5)

## சர்வதேச மனிதாபிமானச்...

அவதானித்த அவர் அங்கு மக்கள் எவரும் இல்லை என்றும் எரிந்து போன மரங்களும் ஆட்களற்ற கூடாரங்களும் வாகனங்களுமே காணப்பட்டதாகவும் கூறியுள்ளார். அவர் மேலும் கூறியதாவது,

அந்தப் பகுதி மோதலின் மையப் பகுதியாக இருந்ததை என்னால் உணரக் கூடியதாக இருந்தது.

மோதலின் பின்னர் மக்கள் அங்கிருந்து வெளியேறியிருக்கலாம். இந்த மோதல்களில் இரு தரப்பாலும் மேற்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும் போர்க் குற்றங்கள் குறித்து குற்றம் சாட்டப்படக் கூடிய சாத்தியங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

ஐ.நாவின் கரிசனைகளின் படி அங்கு மிகத் தெளிவாக மிகவும் மோசமாக திட்டமிடப்பட்ட வகையில் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் மீறப்பட்டுள்ளன.

இந்த விவகாரங்கள் சர்வதேச சமூகத்தாலும் ஐக்கிய நாடுகள் சபையினாலும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியதாகும்.

இது குறித்த விடயங்கள் கவனத்திற்கு கொண்டுவரப்படும் பொழுது ஒவ்வொரு விடயம் குறித்தும் நாங்கள் குறிப்பாக ஆராய்வோம்.

தற்பொழுது பெரும் எண்ணிக்கையிலான மக்கள் இடம்பெயர்ந்து அந்த முகாம்களிற்கு வந்திருக்கிறார்கள். நான் நினைக்கிறேன் பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்களின் இழப்பு தவிர்க்கப்படவேண்டுமென்று.

ஐ.நாவும் உலகெங்குமுள்ள தலைவர்களும் தொடர்ச்சியாக இலங்கையைத் தொடர்பு கொண்டு கொடுத்துவந்த அழுத்தத்தின் மூலமே இது நடந்திருக்கிறது என்பதை நாம் அங்கீகரித்தாக வேண்டும்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் அங்கு இருந்திருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக அங்கு இரத்தக்களரி இடம்பெற்றது என்று நாம் விபரிக்க முடியுமா என்பது எனக்குத் தெரியவில்லை.

அதேவேளை அந்தப் பகுதியிலிருந்து பெருமளவான மக்களை வெளியேற்ற முடிந்தது ஒரு பெரிய விடயம்தான் என்று விஜய் நம்பியார் தெரிவித்துள்ளார். (ச-14)

## மன்மோகன் சிங்...

அமைச்சர்கள் பதவி ஏற்க வேண்டிய நிலையில் ஆளும் கூட்டணியில் உள்ள தி.மு.க., திரிணாமுல் காங்கிரஸ் மற்றும் தேசிய மாநாட்டுக் கட்சிகளுடன் இலாக்காக்களை பகிர்ந்து கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதால் நேற்று பிரதமர் மன்மோகன்சிங் உட்பட்ட சில பேர் மட்டுமே மத்திய அமைச்சர்களாக பதவி ஏற்றனர். விரைவில் இதர அமைச்சர்கள் பதவி ஏற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய அமைச்சரவையில் பிரணாப் முகர்ஜி, ஏ.கே.அந்தோனி, சிதம்பரம், சரத் பவார், ஜெய்பால்ரெட்டி ,வீரப்பமொய்லி, எஸ்.எம். கிருஷ்ணா, அம்பிகா சோனி, மீராகுமார், மம்தா பனர்ஜி, கபில்சிபல், பரத்வாஜ் , கமல் நாத், குலாநபி ஆசாத், வயலார் ரவி, சுசில் குமார் ஷிண்டே, முரளி தியோரா, ஹெண்டிக், ஆனந்த் சர்மா, ஜோஷி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். பதவிஏற்பு விழாவில் துணை ஜனாதிபதி அன்சாரி, காங்கிரஸ் தலைவர் சோனியா, அத்வானி உட்பட்ட பலர் பங்கேற்றனர். விழா இரவு 7.15 மணியளவில் நிறைவு பெற்றது. (ச-5)

## இறுதிக்கட்ட யுத்தத்...

கடந்த 2006ஆம் ஆண்டு ஆவணி மாதம் இறுதிக்கட்ட போர் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் 6 ஆயிரத்து 261 படையினர் கொல்லப்பட்டதாகவும் 29 ஆயிரத்து 551 படையினர் காயமடைந்திருப்பதாகவும் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்தப் போரின் வெற்றிக்காக தாம் பெரும் தியாகத்தை செய்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பி.பி.சிக்கு கருத்துத் தெரிவித்த இராணுவப் பேச்சாளர் ஒருவர், இந்தப் போராட்டங்கள் ஆரம்பித்த 1981ஆம் ஆண்டின் பின்னர் இன்றுவரை சுமார் 24 ஆயிரம் படையினர் கொல்லப்பட்டுள்ளதாகவும் இதில் நான்கில் ஒரு பங்கினர் இறுதிக்கட்ட போரில் கொல்லப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த மோதல்களில் விடுதலைப் புலிகள் எவ்வளவு பேர் கொல்லப்பட்டார்கள் என்பது குறித்து அதிகாரபூர்வமான தகவல்கள் கிடைக்கப்பெறாத போதிலும் சுமார் 15ஆயிரம் முதல் 20 ஆயிரம் வரையிலான விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதேவேளை கடந்த ஜனவரி மாதம் முதல் 7 ஆயிரம் பொது மக்கள் கொல்லப்பட்டதாக ஐ.நா. கூறியுள்ளது. ஆனால் இவ் எண்ணிக்கையுடன் அரசாங்கம் முரண்பட்டுள்ளது. (ச-5,14)


**பொருளியல் கருத்தரங்கு**

யாழ்ப்பாணம் DMI யிலும் நெல்லியடி CRISTAL கல்வி நிலையத்திலும் நடைபெறவுள்ள மாபெரும் பொருளியல் கருத்தரங்கிற்கான பதிவுத் திகதி 28/05/2009 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

By: S.S.SRI (C-2494)



**SUBRA - (14) சித்தன்கேணி**

பௌதிகவியல் 2011 A/L

பொறியியல்

ஆரம்பம்-23.05.2009

SAT,SUN:-5.00-6.00 P.M.

By:- SCIENCE CORNER ஆசிரியர் (2760)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.05.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.